ISSN 2719 - 2520

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

ஜனவரி – பிப்ரவரி 2021

இதழ் 04




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தமிழ்நெஞ்சங்களே வணக்கம்.

அன்பான வாசகர்கள் தமிழ்நெஞ்சம் இனையத்திலிருந்து தரவிறக்கம் செய்து படிக்கலாம்.

ஏழுத்தாளர்கள், கவிஞர்கள், கட்டுரையாளர்கள் தங்களின் ஆக்கங்களை மின்னஞ்சல் வழி அனுப்பித் தாருங்கள்.

இதழ் ஒவ்வொரு மாதமும் முதலாம் வாரத்தில் வெளியிடப்படுகிறது.

இதழைப்படிப்பதுடன் நில்லாமல் இதழ் பற்றியக் கருத்துகளையும் பதியும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி!

https://tamilnenjam.com

editor@tamilnenjam.com

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

**ஜனவரி – பிப்ரவரி 2021**

இதழ் 04

**ஆசிரியர் : சித்தி வஃபீரா**

editor & publisher : Sithy Wafeera

**கௌரவ ஆசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**

Hon. editor : Tamilnenjam Amine

படைப்புகளின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.

படைப்புக்கள் அனுப்பவேண்டிய முகவரி:

email :
muththamizh.kalasam@gmail.com

The editor of “Muththamizh kalasam”,

23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பக்கம்



அன்புக்குரிய வாசகர்களே வணக்கம்!

இம்முறை சமூக வலைத்தளங்களை சற்று பார்ப்போம். அவை தீக்குச்சி போன்றது என்பதில் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அதன் செயல்பாடு நல்லவர் கையால் தீபமேற்றவும், தீயவர் கையால் தேசத்தைக் கொளுத்தவும் செய்கிறது. சமூக வலைத்தளங்களில் கற்றுக் கொள்ள எவ்வளவோ நல்ல விடயங்கள் இருக்கின்றன. அறிவைத் தேடுவோர்க்கு அவை அறிவுக்களஞ்சியமாக அள்ளிக் கொடுக்க, தீயதைத் தேடிச் செல்வோரையும் அவை கைவிடுவ தில்லை. பல்லாயிரக்கணக்கானோரின் வாழ்க்கையை மட்டுமன்றி உயிர்களையும் சிதைக்கு மளவு எமனாகவும் உள்ளதை யாரும் மறுக்கத்தான் முடியுமா?

இங்கு கவனமாகக் கால் பதித்து, பகுத்தறிவுடன் செய லாற்றுபவர்கள் வெற்றியுடன் நிம்மதியையும் சம்பாதித்துக் கொள்கிறார்கள். அதேபோல் சமூக ஆர்வலர்களும், பல ரசிகர் மற்றும் நற்பணி மன்றங்களும் இரத்த தானம், நன்கொடைகள்,நலிந்தோருக்கான உதவிகள், அனர்த்த நிவாரண பணிகள் போன்ற நற்பணிகளை முன்னெடுப்பதில் முன்னணி வகிப்பதும் குறிப்பிடத்தக்கவை. இவையனைத்தும் ஒரு சமுதாயத்துக்கு ஆரோக்கியமானவையே!

சுய அறிவுள்ளவர்கள் தேடித் தேடி அறிவை வளர்க்க, அறிவிலிகளோ அழிவைத் தேடிச் சென்று படுகுழியில் வீழ்கிறார் கள். இதில் பெரும்பாலும் பலியாவது இளம் வயதினரே!

இத்துடன் செல்ஃபோன் மோகமும் சேர்ந்து இளம் சமுதா யத்தை ஆட்டிப் படைக்கிறதெனலாம். எங்காவது விபத்தோ அனர்த்தங்களோ நடக்குமிடத்து, உதவிக்கு செல்பவர்களை விட அதை சமூக வலைத்தளங்களில் நேரலையாகவோ, படம் எடுத்தோ பதிவிடுபவர்களே அதிகம். இக்காரணத்தினாலும் உதவிகள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டு, பல உயிரிழப்புகளும் பதிவாகும் துர்ப்பாக்கிய நிலையையும் காண்கிறோம்.

தொழிநுட்ப வசதிகள் இன்று பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கப்பால் இருப்போரையும் ஒரு நொடியில் இணைக்கும் இந்த நவீன யுகத்தில், இணையக் கல்வியும், அத்தோடு எந்த அறிவுத்தேடலுக்கும் பதில்களை விரல்நுனிகளில் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் உள்ளதால் ,பகுத்தறிவுடன் சமூக வலைத்தளங்களைக் கையாள்வோம். நல்ல விடயங்களை மட்டுமே உள்வாங்கிக் கொள்வோம். இதன்மூலம் எல்லோருமே பயன்பெறச் செய்வோம் தேவையற்ற சிக்கல்களைத் தவிர்த்துக் கொள்வோம்.

வாசகர்கள், எழுத்தாளர்கள் அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துகள்!

*– சித்தி வ.ஃபீரா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலதனம் ஆனேன் நான்

## மருதூர் மௌஜூன்

நானொரு நெடுஞ்சாலை
கொந்தராத்து வர்த்தகரால்
சிமெந்து குறைத்து ஒன்றை
ஒன்று இணைக்க முடியாத
மண்கலவையால் செப்பனிடப்
பட்டு பார்வைக்கு அழகானேன்

பார்வையிடப் பிரதான
பொறியியலாளர் வந்த போது
சீரின்மை பார்த்து
செம்மையாகச் செப்பனிட
பணிப்பாரென பார்த்திருந்தேன்

அவர் பாஸ் போட்டு கண்ணசைத்து
வர்த்தகரிடம் கை குலுக்கிக்
கடந்து சென்றார் பணம் பண்ணும்
ஆசை அவருக்கும்

சில நாளில் வந்த சிறுமழைப்
பொழிவில் சீர் குலைந்து
போனேன்

நாசமாய் போன பாதை என
நச்சரித்துக் கொண்டே பயணிகள்
பயணிக்கையில் வலிக்கிறது
வலியில் வரும் கண்ணீரும்
மழை நீரில் கலந்து குன்றும்
குழியுமான என் தேகத்தில்
தேங்கி கிடக்கிறது

குளிரூட்டிய அறையில்
சுழலும் நாற்காலியில்
சொகுசாய் வாழும்
அதிகாரிகள் கூட்டம்

அடுத்து வரும் நிதி ஒதுக்கீட்டிற்கும்
என்னை மூலதனமாக்கி
பணம் பண்ணக் காத்திருக்கையில்
கொந்தராத்து வர்த்தகர்தான்
என்ன செய்வார்

ஒதுக்கிய நிதியை நம்பி கடன்பட்டு
கையூட்டுக் கொடுத்து கரைந்தது போக
எஞ்சியதை சிறுபொருட் செலவில்
செப்பனிட்டார் மிஞ்சியது அவருக்கும்
கொஞ்சம் வளமான வாழ்வுக்கு
ஆசைப்பட்டு அநீதியாய் பொருளீட்டக்
கைநீட்டும் அதிகாரிகள் திருந்தாத
வரை அவர்கள் அகம் போல என்
முகச்சிதைவும் எப்போதும் செப்பனிடப்
படப் போவதில்லை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவதை

ஏற்றம் தரும் வாழ்வில்
மாற்றம் தர வந்தவளே
மாற்றங்களை தந்து விட்டு
ஏமாற்றமும் தந்தது ஏன்?

நீ காற்றில் எனக்காக
தூது விட்ட முத்தமெல்லாம்
என் காதில் இடியின் சத்தமாய்
வந்து விழுவதேன்?

உன் சோகங்களை
என்னுள் புதைத்து விட்டு
என் புன்னகையை
ஏன் பறித்துப்போனாய்!

தேவதையாய் வந்தவள் நீ
கானலாகி சென்றது ஏன்?
வேண்டும் வரம் கேள்
நான் செய்வேன் என்றாயே...
என் அருகே நீ வேண்டும்
வரம் தருவாய் தேவதையே!



தமிழ்நெஞ்சம் அமின்
பிரான்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்தல் இனிது

## றிஷா ரஹ்மான்

நேர்மறையான சிந்தனைகள் உங்கள் பலம்.

எந்தவொரு சூழ்நிலையிலும் மனதிற்கு வலிமை சேர்ப்பது நேர் மறையான எண்ணங்களே.

எதை வலுவாக திரும்ப திரும்ப சொல்லிக் கொண்டு இருக்கிறோமோ அது உண்மை என்று மனது நம்புகிறது.

மேலும் மனம் முடிவு செய்யும் தீர்மானமான முடிவுகள்தான் செயலாக மாறுகிறது.

அப்படித்தான் திரும்ப திரும்ப எதை நம்புகிறோமோ (தீர்க்கமாக) அதை வாங்கிக் கொள்ளும் ஆழ் மனது... அதை ஒரு கட்டத்தில் செயல்பட வைக்கிறது.

அதாவது நாமே அதை செய் கிறோம். நாம் செய்ய வேண்டியதை பெரும்பாலும் செய்யாமல் காலத்தை யும் நேரத்தையும் குறை கூறி கொண்டே இருக்கிறோம்.

இப்போதிருக்கும் நமது நிலைக்கு கடந்த காலத்து நமது செயல்கள்தான் காரணம் என்பதில் எந்த மாறுபட்ட கருத்தும் இருக்க முடியாது. அப்படி என்றால் நமது எதிர் காலத்தை தீர்மானிக்க போவது எது?

நமது நிகழ்காலத்து செயல்கள் அல்லாது வேறென்ன?

புறச்சூழ்நிலை, பணவசதி, நமது பிரச்சினைகள் எல்லாம் ஒரு மாயை...

அதிலிருந்து தொடர்ச்சியான நேர்மறையான சிந்தனைகள் மூலம் வெளி வர முடியும். ஒரு விசயத்தை எடுத்துப் பார்த்தால் வெற்றி பெற்றவர்களுக்கு எல்லாம் ஒரே ஃபார்முலாதான் இருந் திருக்கிறது. அவர்கள் எப்போதும் தங்களின் செயல்களிலும் நேரத்திலும் கவனம் வைத்திருந்ததோடு மற்ற மனிதர்களின் நிறையை பாராட்டு பவர்களாய் இருந்தனர்.

மொத்த ஆய்வுக் கூடமும் எரிந்த போது எடிசன் கவலைப் படவில்லை... என் தவறுகள் எரிந்து கொண்டிருக்கின்றன என்றார்...!

அந்த நேர்மறைப் பார்வை தானே... இன்று எல்லோருடைய வாழ்க்கையிலும் வெளிச்சம் கொடுத் திருக்கிறது...?

நேர்மறையாக சிந்தித்தல்..

- உங்கள் திறமையின் மீது நம் பிக்கை வையுங்கள். உங்களின் சக்தி மீது நம்பிக்கையின்றி உங்களால் எதிலும் வெற்றியடைய இயலாது.
- மனஅமைதி என்பது ஒரு மனித னின் வெற்றிக்கும், நிம்மதியான வாழ்வுக்கும் தேவையான அடிப் படைத் தகுதியாகும். பிரச்சி னைகளை நம்முடன் தேக்கி வைத்திருப்பது அல்லது அதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைத்துக்கொண்டே இருப்ப தானது எதையும் செய்யவிடாது. எதிர்மறை எண்ணங்கள் நம்மை நிம்மதியாக வாழ விடாது. நாம் நினைத்த காரியத்தில் வெற்றியடைய தேவையான சக்தியை நாம்தான் உற்பத்தி செய்துகொள்ள வேண்டும்.

- எதிர்மறை சிந்தனையின் வெளிப் பாடுதான் கோபம். எனவே கோப மும், கவலையும் எப்போதும் இருக்கக் கூடாது. ஏனெனில், பல வீனமான மனிதர்களிடமிருந்து வாய்ப்புகளைத் தட்டிப்பறிக்க இந்த உலகில் பலர் காத்துக் கொண்டுள்ளனர். எதிர்மறை எண்ணங்கள் உங்களை பலவீனமானவர்களாக காட்டும். கோபம் மற்றும் கவலை போன்றவை எதிர்மறை எண்ணங் களின் தொடக்கப் புள்ளிகளாக உள்ளன.
- எனவே அவற்றைத் தவிர்க்க வேண்டும். இதன்மூலமே, நேர் மறை எண்ணத்தின் முதல் படியை நீங்கள் அடைகிறீர்கள்.
- வாழ்வின் மோசமானப் பகுதியை கடந்துவிட்டோம், இனிமேல் நமக்கு வசந்தம்தான் என்று நினைக்க ஆரம்பித்தால், எதிர் மறை எண்ணங்களையும் களைய முடியும்.
- நம் வாழ்வை உற்சாகமாக்கும் மாற்றம் நமக்கு வேண்டும். புதிய சிந்தனைகள் மற்றும் முயற்சிகள் நமது எண்ணங்களுக்கு புத்து ணர்ச்சி ஊட்டக்கூடியவை. எனவே, எப்போதுமே புதிய எண்ணங் களுக்கு உற்சாகம் அளிக்க வேண்டும்.
- மருத்துவ அறிவியலில் நிரூபிக்கப் பட்ட ஒரு உண்மை என்னவெனில், ஒரு நோயாளி என்னதான் சிகிச்சை எடுத்துக்கொண்டாலும், தனது உடல் நலம் விரைவில் தேறிவிடும், தான் பூரண குணமடைந்து விடு வோம், நமக்கு எந்த சிக்கலும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை என்று நினைத்தால், அவரின் அந்த எண்ணமும், அவர் குணமடைய பெரும் பங்கு வகிக்கும். மிகவும் மோசமாக உடல்நிலை பாதிக்கப்பட்ட பலர், தங்களது அபார நம்பிக்கையால் மீண்டு வந்த வரலாறுகள் ஏராளம்.

- இந்த உலகில் ஒவ்வொருவருமே, ஒரு தனித்திறமையுடன் பிறக்கின் றனர். தனது தனித்திறமையை இளமையிலேயே கண்டுகொண்ட ஒருவர், வாழ்வில் நல்ல உயரத்தை எட்டுகிறார்.
- தோல்வியடைந்தவர்கள், தங்க ளின் குறைகளையும், தங்களின் சுற்றத்தையும் குறை கூறிக் கொண்டே இருந்து விடுவார்கள்.
- சச்சின் டெண்டுல்கரை உதாரண மாக எடுத்துக் கொண்டால், அவர் சராசரியைவிட குறைவான உயரம் கொண்டவர், ஆனாலும் தனது பேட்டிங் திறமையை சரியான நேரத்தில் அவர் அடையாளம் கண்டதால், அவர் இன்று இந்தளவிற்கு பிரபலமாகி யுள்ளார்.
- நாம் கண்ட மற்றும் காணும் பல பிரபலங்கள் தன்னகத்தே பல குறைகளை உடையவர்கள். ஆனா லும் குறைகளை ஒதுக்கித் தள்ளி அவற்றை மேம் படுத்துவதில் கவனம் செலுத்தியதால் இன்று பெரிய மனிதர்களாக வந்துள்ளனர்.
- எதிர்மறை எண்ணம் நமது முன் னேற்றத்திற்கு மாபெரும் எதிரி என்பது தெரிந்தும் ..அதை களையும் வழி தெரியாமல் பலரும் திண்டாடுகிறோம்.
- அந்த நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டால், வாழ்வில் நமக்கு தோல்வி என்பதே கிடையாது.

ஒரு எதிர்மறை சிந்தனை யாளர், எப்போதும் பிறரிடம் குறைகளையேக் காண்பார்.

ஒரு ஆரோக்கிய மனிதரைக் கண்டால், அவர் நோயுற்றிருந்தால் என்ன ஆகும் என்ற வகையில் யோசனை செய்வார்.

ஒருவருக்கு வாழ்வில் எதாவது ஒரு சூழலில் அல்லது சூழல்களில் எதிர்மறை எண்ணங்களை வந்தே சேரும்.

உதாரணமாக, தேர்வை சரியாக எழுதாததால்அதில்தோல்வியடைந்து விடுவோமா? என்று நினைப்பது அதில் ஒருவகை. ஆனால் இது போன்ற எண்ணங்களிலிருந்து

## விசும்பல்களாக

இறந்து போவதில் இல்லாத வலியை உன்னை மறந்து போவதில் உணர்கிறேன்

காதல் உயிர் பறிக்கும் விஷமென்பதை உன் பிரிவில் கண்டு கொண்டேன்

ஏன் இப்படி என்று வினா எழுப்பு முன்னே விடியல்கள் அஸ்தமித்துப் போய் விட்டதே

தூசு விழுந்ததைப் போல் கண்கள்

கண்ணீரைப் பொழிய இதய வேதனையின் விசும்பல்களாக நான்....

**வினோதினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுபடும் வழிகளைத் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். அதற்கான வழிமுறைகள் சில இங்கே வழங்கப்பட்டுள்ளன.

- கவலைப்படுவதை நிறுத்துங்கள். கவலைகள் உங்களை சூழ்ந்திருக்கும்போது ஏதாவது நல்ல விஷயங்களைப் பற்றி நினையுங்கள்.
- கவலைத் தரும் கலந்துரையாடலில் கலந்துகொள்வதைத் தவிருங்கள். இது எப்போதும் உங்களைப் பாதிக்கும்.ஒருவேளைஅதுபோன்ற சூழலில் சிக்கிக்கொள்ள நேர்ந்தால், நேர்மறையான விஷயங்களை நீங்களே முதலில் பேச ஆரம்பிக்கவும். எதற்கெடுத்தாலும் கவலைப்பட்டு, தங்களின் தோல்விக்கு மற்றவர்களைக் குறைகூறும் நபர்கள் நிறைய உள்ளனர். அதுபோன்ற நபர்களை நீங்கள் தவிர்த்துவிட வேண்டும்.
- இந்த உலகைப் பற்றி நேர்மறை எண்ணம் கொண்டவர்களிடம் நட்பை ஏற்படுத்திக் கொள்ளவும்.
- மற்றவர்கள் கவலையிலிருந்து விடுபட அவர்களுக்கு உதவி செய்யுங்கள்.இதன்மூலம்உங்களின் தன்னம்பிக்கை மேம்படும்.
- இந்த உலகம் உங்களுக்கு ஆதரவாக இருக்கும் என்ற எண்ணம் வேண்டும். அதேசமயம் தூய்மையான கடவுள் நம்பிக்கை உள்ளவர்களுக்கு, அந்த நம்பிக்கையும் துணைபுரியும்.
- எனவே குறைகளை மறப்போம்! நிறைகளை மட்டுமே நினைப்போம்! வாழ்வில் வெற்றியடைவோம்!

"இனிது இனிது. .
வாழ்தல் இனிது"

நற்சிந்தனைகள் இனியும் தொடரும்!



# யாதுமானவனே

யாதுமானவன் நீயே
யாரோவாகிப் போகாதே
ஆழமாய் என்னுள்
அமிழ்ந்தவன் நீதானே
வானமாய் பரந்த
எந்தன் மனதிலென்றும்
வண்ண நிலவாகவே
ஒளியை வீசுகிறாய்

கனவில் வந்து
கலகமூட்டிப் பின்
கண் திறக்கையில்
ஓடி மறைந்து
தினமும் இன்ப
உலகைக் காட்டி
தித்திப்பை மனதுள்
வார்த்துப் போகிறாய்

அறிவுரையில் சிறந்த
அன்னை ஆகிறாய்
அக்கறையில் அன்புத்
தந்தை ஆகிறாய்
துணை வருகையில்
அண்ணன் ஆகிறாய்
தோள் கொடுக்கையில்
நண்பன் ஆகிறாய்

அழகில் சந்திரனாய்
அன்பில் அரணானவனே
இதயத்தில் நுழைந்து
இம்சைகள் செய்பவனே
ஆனந்தத் தேரிலேற்றி
அணுவணுவாய் ரசிப்பவனே
ஆயுள்வரை வேண்டுமடா
அன்பொன்றே போதுமடா...

**தனா சர்மா**
ஈழம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதங்கள்

மதங்கள் எமக்கு காட்டும் வாழ் வென்பது அன்பின் வழி நிலைத் திருப்பதையேவிரும்புவதேஆகும்.எல்லா மதங்களும் அடிப்படையில் ஒன்றையே வலியுறுத்துகின்றது. ஒன்றுபட்ட அன் பில் கட்டி யெழுப்பப்படும் வாழ்வே நிலை வாழ்வு அதனூடாக மலர்வதே ஆன்மீகம் எனும் உயர்நிலை என்பதையே மதங்கள் அடிப்படையில் எமக்கு ப்போதிக்கின்றன.

அன்பின் வழியது உயிர் நிலை மட்டுமல்ல அதன்வழியே மானுடத்தின் உயர்நிலையும் மேலோங்கச் செய்யப் படுகிறது என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை.

இதையே எல்லா மதங்களும் எமக்கு கற்றுத்தருகின்றன. எனவே இத்தகைய மதங்களை நாம் மதிக்க கற்றுக் கொள்ள வேண்டியது அவசிய மாகிறது. மதங்களை மதிக்க கற்றுக் கொள்வதன் ஆரம்பம் எமைச் சுற்றி யுள்ள மனிதர்களை நேசிக்க கற்றுக் கொள்வதில் நிகழ்கிறது.

மனிதர்களின் மனம் ஒரு சரியான புரிந்துணர்வோடு இயங்கும் போது இது சாத்தியமாகிறது. பிரச்சினைகளற்ற மனிதர்களை காண்பது எவ்வளவு அரிதோ அதுபோல்தான் இன்று நேசிக்கும் மனிதர்களை நாம் காண்பதும் அரிதாகிவருகிறது.இந்தநிலையிலிருந்து மாறி நாம் முதலில் நம்மையும் நம்போல் பிறரையும் நேசிக்கும் போதுதான் ஒரு புரிந்துணர்வு அங்கு உருவாகும். அந்த புரிந்துணர்வு நம்மிடையே நம்பிக்கையை வளர்க்கும். நம்பிக்கை மனிதர்களிடையே உருவாகும் போதுதான் சகமனிதரை மதிக்கின்ற அன்பில் கட்டியெழுப்பப் படுகின்ற சமூக மொன்றை உருவாக்கும் வேலையை செய்யும் வண்ணம் மதம் தன்னை நிலைநிறுத்திக் கொள்கிறது. ஆக, அடிப்படை அன்புதான். இவ்வாறாக அன்பை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பெற்ற எல்லா மதங்களையும் மதிக்க பழகும்போது அது பல நன்மைகளை நம் மத்தியில் ஏற்படுத்துகின்றது.

புரிந்துணர்வும் நட்புடனும் கூடிய சமூகத்தின் ஸ்திரமான கட்டமைப் பிற்கு அது வழிகோலுவதோடு மனிதர் களிடையே நம்பிக்கையையும் ஐக்கியத் தையும் வளர்க்கிறது.

முரண்பாடற்ற, தீர்வுகளை எடுக்கும், செயற்படுத்தும் வகை யிலான சமூகத்தின் தோற்று வாயாக வும் மதங்கள் மாறும்.

- நிலு பண்டாரவளை.

## இரவில் ஒரு நாள்

நீண்ட இரவில்
இருட்டு அறையில்
வீடு முழுதும்
தேடி தேடி
வீதி வரை வந்தும்
கிடைக்கவில்லை
தடுமாறி விழ
கையில் கிடைத்த
தீப்பெட்டியில் இருந்த
தீக்குச்சி உரசி உரசி
கடைசி குச்சியில்
கிடைத்த ஒளியில்
கண்டு பிடித்தேன்
என் பின்னால்
மறைந்திருந்த
என் நிழலை

**- J. K. பாலாஜி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகந்த மணம் பரப்புகிறாய் ...

மின்னலாய்த் தோன்றி கண் மூடி திறப்பதற்குள்
மறைந்து போன மாய மென்ன

முழு நிலவை ரசித்த படி நான் நடந்து போகையில்
அது எனை கடந்து போக, ஒளி குன்றாமல்
இதயத்தில் ஓவியமாக வரைந்து விட்ட உன் நினைவுகள்
செதுக்கிய சிலையெனவே நிற்க

அழகோவியமாய்
வான வில்லின் கோலங்கள் மறைந்து போனாலும்
மழைத்துளிகள் வீழ்ந்து கொண்டே இருக்க,

மண்ணை நோக்கித்
தாலாட்டும் தென்றலோ மெல்ல மெல்லத் தலை கோதி ச் செல்ல,
அசைந்தாடும் ரோஜாக்களோ இதழ் விரித்து அழகூட்ட,

உன் நினைவின் வருடலோ ஞாபகப் பூக்களாய்
உளமெங்கும் ஸ்பரிசிக்கின்றனவே சுகந்த மணம் பரப்பி

**சஹ்னா சஃபா**



# தைப்பொங்கல்

### எண்சீர் விருத்தம்

மண்ணடுப்பு வெட்டிமிசை மண்பானை ஏற்றி
வயல்தந்த பச்சரிசிப் புதுவெள்ளம் சேர்த்துக்
கொண்டலிடை கதிர்வீசிக் குளிர்நீங்கும் போழ்தில்
கொடிமஞ்சள் பானைகட்டி வாழைகன்னல் படைப்பார்
வண்ணமிகு கோலத்தால் வாசலெழில் சூட
மனிதரொடு மாட்டுக்கும் நன்மதிப்புக் கூட
வண்டமிழின் இனமேற்ற வாழ்வியலைப் புவியின்
வரலாறாய் மாறவைத்த தைப்பொங்கல் திருவே...

**- இதயம் விஜய், ஆம்பலாப்பட்டு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதின்மம்

கூத்தடிக்கும்
ரகளை பண்ணும்
வெறி கொண்டு ஆடும்
நேசிக்கும்
வீரம் காட்டும்
கனவுகள் காணும்
சாகசங்கள் நிகழ்த்தும்
கற்பனைகளில் அலையும்
கட்டு மீறும்
வெடித்துரைக்கும்
அடங்க மறுக்கும்
சட்டென உடைந்து போகும்
ஏங்கும்
ஏமாறும்
கண்மூடித் தாவும்
துள்ளும்
துடிக்கும்
எகிற உறுமும்
சாத்தானையும் கடவுளையும்
சமமாகப் பாவிக்கும்
சரி தப்பு அறியாது குழம்பும்
வெளித் தோற்றத்திற்கு மயங்கும்
உள் மனதுள் யாவற்றையும்
புதைக்கும்
சுண்ணாம்புக்கும் வெண்ணெய்க்கும்
வித்தியாசம் தெரியாது
வெளுத்ததெல்லாம் பாலென நம்பும்
மாற்று உடலை மோகிக்கும்
மாறுவதை எதிர்க்கும்
காற்றென நிலை மாற்றும்.

**வசந்ததீபன்**



# நான் சிரித்துக் கொள்கிறேன்

24 மணித்துளிகள் கொண்ட
ஒரு பெருநாளில்
சில நிமிடத்துளிகள்
சிரிக்கலாமென்றிருந்தேன்
அகாலத்தில் வந்த
துயரச் செய்தி ஒன்று
என் மகிழ்ச்சிப் பொழுதைக்
களவாடிச் சென்றது

தொலைக்காட்சி
நிகழ்ச்சியில் மனைவியுடனும்
மக்களுடனும்
பொழுதை கழிக்கலாம்
என்றிருந்தேன்
அப்போது வந்த
அழுகைச் செய்தியொன்று
அப்பொழுதை
அபகரித்துச் சென்றது

பின்பு ஒருநாள்
கதறியழலாமென்று
எத்தனித்திருந்தேன்
அந்நேரம்
அவசர அவசரமாய் வந்த
துயரச் செய்தியை
வழக்கம்போல்
மகிழ்ச்சியென்று
பிடுங்கிச் சென்றது காலம்

இதுதான் சந்தர்ப்பமென
நான் சிரித்துக் கொள்கிறேன்
அந்த மகிழ்ச்சி
இன்று வரையில்
நீடித்துக் கொண்டிருக்க
இடைவெளியின்றி
பைத்தியம் போல்
சிரித்துக் கொண்டிருக்கிறேன்

நீங்கள் எல்லோரும்
ஒரு பைத்தியம் போல்
என்னைப் பார்த்துச்
சிரித்துக் கொண்டிருக்கின்றீர்கள்.

**பாரியன்பன் நாகராஜன்**
குடியாத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமுனி

த. இர்ஃபான்

தமுனி என்றும் தமயந்தி என்றும் வீட்டார்கள் அழைப்பார்கள். ஆனால் அவளது பெயர் தமயந்தி. திருமண அழைப்பிதழில் ஐஸ்வர்யா என்றும் தற்சமயம் அவளது கணவன் எப்படி அழைக்கிறாரென்றும் இதற்கு முன்பு வேறென்ன பெயர் இருந்ததென குறிப்பு களில்லை.

90களில் தான் அவள் எங்களுக்கு அறிமுகமானாள். அப்போது எனக்கு இரண்டரை வயதுக்குள் இருக்குமென நினைக்கிறேன். வீட்டு வேலைக்கு அவள் அமர்த்தப் பட்டிருந்தாலும் அவளுடன் நானும் என்னுடன் அவளும் ஒட்டிப் போனோம். சொல்லப் போனால் நாங்கள் ஒன்றாகிப் போனோம். அவள் என்னை குளிக்க வைக்கிறது, மேல் கழுவி விடுவது, துணிமணிகளை உடுத்தி விடுவது, சோறு ஊட்டி விடுவது, அவளுடன் இரவிலும் தூங்குவது என அவளை மிகவும் கடினமாக காதலிக்க ஆரம்பித்தேன். பள்ளிக்கூடத்திற்கும் சோறை அவளே கொண்டு வருவாள்.

பிறகு என்னை தனியார் பள்ளியில் சேர்த்துவிட்டார்கள். மாலை வீடு வந்ததும் என்னுடைய இரண்டு கோடு நோட்டு, நான்கு கோடு நோட்டு அதிலும் அவளது கை வரிசையே இருக்கும்.

மொழி தெரியாத பாடல்கள் தொலைக்காட்சியில் வி.சி.ஆர் மூலம் போட்டுவிட்டு பால்சோறு ஊட்டுவாள். இப்போது ஏதேனும் ஒரு இரவில் பாலூற்றி உண்டால் அவளது கை வாசனை அதில் இருப்பதில்லை.

இரும்பு பெட்டியொன்று வைத்திருப்பாள். அது ஒன்று தான் அவளுடைய எல்லாமும்.அதில் தான் பவுடர், சீப்பு, சீயக்காய், பாவாடை தாவணி யென வைத்திருப்பாள்.அவளை நேசிப்பதினால் ஏதாவது அன்பளிப்பு செய்ய வேண்டுமென்று அவளுடன் மளிகைக் கடைக்கு செல்லும்போதும் புதிதாக திறக்கப்பட்ட ஃபேன்ஸி ஸ்டோருக்கு சென்றப்போதும் பவுடர் டப்பா, பவுடர் பஞ்சு, சீப்பு, கண்ணாடி போன்றவை என் பாக்கெட் மணி சேமிப்பில் வாங்கினேன்.என்னை எப்போதும் தம்பி யென்றே அழைப்பாள். வீடு திரும்பியதும் அதை யெல்லாம் கொடுத்து மகிழ்வேன். அவள் என் அம்மா விடம் இங்க பாருங்க «தம்பி என்னென்ன கொண்டு வந்திருக்கென» காட்டுவாள். அம்மா அதட்டுவாள் பிறகு மறந்துவிடுவாள். அவள் தீபாவளி, பொங்கலுக்கு தன் அம்மா வீட்டிற்கு செல்வாள்.குறைந்த பட்சம் 10 நாட்கள் அவள் சென்ற நாட்கள் இருள் அடைந்தது போலிருக்கும்.அவள் ஊருக்கு போவதற்கு முன்பே பொட்டுவெடி,கம்பி மத்தாப்பு, சாட்டை, பாம்பு மாத்திரை வாங்கிக் கொடுத்து ஒரு தீபாவளி என்னுடன் கொண்டாடி விட்டே செல்லுவாள். அவளுடைய அம்மா கூடை வியாபாரி. சில நாட்கள் கீரை விற்கும் சில நாட்கள் எல்லா காய்கறிகளையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலந்து விற்கும். அவளுடைய தந்தை ஜெயராமன்.இவள் இளம் வயதிலேயே அவர் காலமாகி விட்டார். அதன் பின் லட்சுமி ஆகிய இவளது அம்மா ஆங்காங்கே வீட்டு வேலை செய்து வந்தாள். அப்போது தான் எங்கள் வீடு அவளுக்கு அகப்பட்டது. அதிலிருந்து தமுனியை இங்கயே விட்டு விட்டாள். பாதுகாப்பிற்காகவும் கல்யாணம் காட்சி என்பதற்காகவும். சிறுக சிறுக அடுப்படி வேலையை கற்று அடுப்பங்கரையை ஆட்சிக்கொண்டாள் தமுனி. நிதான மானவள், சிக்கனமானவள், புத்திக் கூர்மை யானவள், அன்பானவள். வாழ்க் கையை அதன் போக்கில் விட்டு விட்டு அதிலிருந்து மீளக்கூடியவள்.

ஒரு முறை புயல் வந்தது. அப்போது எனக்கு கஞ்சி சோறு செய்து தந்தாள்.அந்தக்காலக்கட்டத்திலேயே விறகு அடுப்பில் மொறுவல் தோசை செய்துக்கொடுப்பாள்.செயல்களை கொண்டேஇதயத்தால்பேசக்கூடியவள். அக்கம் பக்கத்திலிருப்பவர்களுக்கு பொறாமை தலைக்கேறியது.இவளைப் போன்று நமக்கொரு வீட்டோடு வேலை ஆள் கிடைக்க மாட்டேங்கிறதே என்று.

பொங்கலுக்கு போனப்போது தன்தம்பிசெல்லப்பாமூலமாய்சக்கரைப் பொங்கல், கரும்பு போன்றவை அனுப்பி வைப்பாள். தீபாவளியன்று முறுக்கு, அதிரசம், வடை,கார வகைகள் அனுப்பி வைப்பாள். இதையெல்லாம் கடந்து எனக்கு அவளது ஞாபகமே தொற்று வியாதிப்போல் தொற்றிக் கொண்டிருக்கும். அவள் கொல்லைப் புறம் குளிக்கும் போது காவல் காப்பேன். அவளது சோப்பு மட்டும் எனக்கு புது வாசனையை தந்துவிடும். அவளின் முந்தானையை கடித்துக் கொண்டிருப்பேன். சாயங்கால நேரம் பக்கத்து வீடு எதிர்த்த வீட்டிற்கு தூக்கி செல்வாள. அப்போதெல்லாம் எங்கள் வீடு ஓட்டுவீடாகவே மிக மிக அழகிய தோற்றத்தில் இருந்தது. நாங்கள் குளிர்ச்சியாகவே இருந்தோம். ஒரு முறை எதிர்ப்புறம் இருக்கக்கூடிய பாபு வீடு புதிதாக கட்டியிருந்தார்கள். அதற்கு போடப்பட்டிருந்த மொசைக்கல் பாலிஷ் செய்து வடிந்தோடும் தண்ணீரில் ராஷீத் கல்லெறிந்து விட்டான். அந்த பாலிஷ் தண்ணீர் என் மீதுப்பட்டு தலைக்குனிவோடு வீடு வந்தடைந்தேன். அம்மா இப்ப தான்டா குளிச்சிட்டு போன அதற்குள் என்னடா கோலம்னு திட்ட திரும்பவும் தமுனி குளிக்க வைத்தாள்..

ஒருமுறை பள்ளியில் «Milo» கொடுத்தார்கள் விளம்பர யுக்திக்காய். அதை ஒரு துளி கூட பருகாமல் அவளுக்கு கொண்டுவந்தேன்.கொஞ்சம் அவள் குடித்து விட்டுக் கொடுக்க பிறகு நான் முழுவதையும் குடித்தேன். அவள் குடித்து விட்டுக் கொடுத்ததாலோ என்னவோ அதன் சுவை அதிகமாகவே இருந்தது. என்னுடைய உலகம் இப்படி தான் சென்றுக்கொண்டிருந்தது. ஆனால் என்னை விட்டு முழுவதுமாக அவள் செல்லப் போகிறாளென்றும் சென்று விடுவாளென்றும் அறியாத இனம் புரியாத வயது அது.

மாவு மில்லுக்கு அவளுடன் சென்றது இன்றைக்கும் எனக்கு நினை விருக்கிறது.தயிர்சோறும்உருளைக்கிழங்கு வறுவலும் எனக்கு மதிய சாப்பாடிற்கு மிகவும் பிடித்த ஒன்று. 3:15கு பள்ளிவிட்டு வந்தப்பிறகும் எனக்கு சோறு கொடுப்பாள். டியூசன் கிளாஸ்லாம் போனதில்லை நான். கொல்லைப்புறத்தில் பல வீட்டு பாட்டிமார்கள் தாயக்கட்டை, பல்லாங்குழி வெகு விமர்சையாக மதிய சாப்பாடிற்கு பின் அரங்கேறும். அங்கெல்லாம் என்னை அழைத்துச் சென்று வேடிக்கை பார்க்க செய்வாள். சுத்தியல், அரிவாள், கத்தி போன்ற ஆயுதங்களோடே எந்நேரமும் இருப் பேன். தூங்கும் போது கூட ஒரு குறடு பக்கத்தில் இருந்தாலே தூக்கம் வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளைய தினம் எங்கள் ஓட்டு வீட்டை இடித்து தரை மட்டமாக்கி விட்டு புதியதொரு மாடிவீடு கட்டப் போகிறார்களென்று எனக்கு செய்தி வந்தது. அன்றைய இரவு மின்விசிறியும் இல்லை ஒவ்வொன்றாய் கழட்டி சென்று விட்டார்கள் முன்னமே, அன்றைய இரவு முழுக்க விசிறிக் கொண்டே என்னை தூங்க செய்தாள் தமுனி.

பிறகு பாட்டி வீட்டில் மூன்று ஆண்டுகள் வரை தங்கியிருந்தோம். அங்கிருக்க கூடிய வீடுகளுக்கும் என்னை அழைத்துச்செல்வாள்.

புதிய வீடு கட்டியதற்கு பிற்பாடு 4 ஆண்டுகளுக்குள்ளாகவே அவளுக்கு திருமணம் அரங்கேற வரன் வர துவங்கிவிட்டது. அப்போது தான் எனக்கு தெரிய துவங்கியது.நம்மை விட்டு இன்னும் கொஞ்சநாளில் தமுனி சென்றுவிடுவாளென.அப்போது எனக்கு 10 முதல் 12 வயதுக்குள் இருக்கும்

பண்டிகை தினத்தில் சேமிக்கப் பட்ட காசில் வெள்ளி மோதிரமொன்று செய்து அவளிடம் காண்பித்தேன். தம்பி கைல போட்டவுடனே பள பளனு மின்னுதே என்றாள்.

## இயற்கைத் தரும் சிவப்பெச்சரிக்கை

அண்டவெளியில் உலாவும் அளவில்லாத உயிர்காற்றை
அள்ளித்தந்தேன் அடக்கி ஆளத்தெரியா மனிதா!
கொட்டும் உயிர்வளி கோடித் தருமே
ஒப்பில்லாத் தேகமதில் ஒளியேற்றும் உன்னதத்தை
எங்ஙனம் காப்பாய் என்னைச் சிதைக்காது ???

போகின்றப் பாதையிலும் உயிர்ப்பித்தேன் எழிலோவியம்
போகாத வழியினையே செய்திட்டாய் அனுதினமும்
ஆகாத நாகரிகம் கண்ணைக் கட்ட
தாங்காதக் கழுவிறக்கி கலக்கினாய் ஆலைக்கழிவை

அற்புதம் கொண்டேன் அடித்துவரும் நீரினிலே
அறிந்தும் காட்சிப் பொருளாக்கி பணம்பார்க்க
அறிவிழந்து நிலமாக்கிப் பரத்தையாக்கி படுகுழியில்
விழியிருந்தும் குருடனாக உலாவ விட்டாயே ?

எத்தனைச் சீற்றம் கொண்டு உபதேசிக்க
அத்தனையும் வீணாக அந்நேரம் சரிசெய்து
உன்னை ஏமாற்றி என்னை ஏமாறச்செய்கிறாய்
மூடனே! எந்திரத்தாலே நிற்கிறாய் உலகில்
முனைந்து அழிவுக்கு செல்லாதே விழித்திரு

தீநுண்மியும் தரும் பாடம் அபாயச் சங்கு
தீக்குள் வீழ்வேனென நினைக்காது எழுந்திரு
தீயாக வேலைச் செய்ய விழித்திரு
கரஞ்சேர்வர் எம்மக்கள் நம்பிக்கையோடே

நாம் இருவர் நமக்கிருவர் இல்லை
நாம் பலர் நமக்கு மண் மைந்தர்கள்
நாமாக வகுப்போம் நற்பாதை இன்றே

**இரா. விஜயகல்யாணி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லட்சுமி என்ற தமுனி அம்மா ஜாதக பொருத்தம் நாள் நட்சத்திரம் எல்லாம் பார்த்து மாப்பிள்ளையும் கைக்கூடிவந்தது. நானும்என்அம்மாவும் பொட்டப்பத்தர் கடையில் அவளுக்கு நகை செய்துக் கொடுத்தோம்.

மாப்பிள்ளை ஒரு தனியார் கல்லூரியில் அலுவலக பணி செய்கி றாராம் பெயர் பாஸ்கராம் என்ற செய்தி மட்டும் என் காதில் விழ,

பிறகொரு நாள் பத்திரிகை யோடும் பழ வகைகளோடும் லட்சுமி வந்து நின்றாள். எங்களால் செய்ய முடிந்த காரியத்தை செய்தோம். புடவை, நகை இன்னும் சில சாமான் வகைகள்.

கோயிலில் அவளுக்கு கல் யாண மாகியது. மாலை வேலையில் எங்களுக்காகவே விருந்து உபசரித்தார் கள். சுமார் 30 பேர் வரை சென்றோம். இட்லி, வடை, கேசரி, பூரி போன்ற அழகிய உணவு நேர்த்தியாக பந்தலில் பரிமாறப் பட்டது. ஊற்றப் பட்ட சட்னி என்னுயிரை குடித்தது என் கண்கள் குளமாகின.

இரவு வீடு வந்தடைந்தோம். அன்றைய இரவு முழுக்க எனக்கு தூக்கமில்லை.

பிறகு அவளை சந்திக்க போனோம். ஒரு குடிசை வீட்டில் இருந்தாள் புதிய புதிய முகங்களோடு, அவ்வப்போது என்னை பார்க்க வருவாள். சென் போல்ஸ்' பள்ளி எதிர்ப்புறம் இருக்கக்கூடிய தள்ளு வண்டி சிப்ஸும் கையுமாக சில நேரம் பண்டிகை நாட்களில்.

நான் மாலையில் சைக்கிளில் போயி பஸ் ஏத்திவிடுவேன் விள நகருக்கு.

பிறகு அவளுக்கு குழந்தைப் பிறந்தது. இரண்டில் ஒன்று அவள் ஜாடையிலேயே இரண்டும் பெண் குழந்தை ஆகும்.

பிறகு கிரகப்பிரவேசத்திற்கு அழைத்தாள் சென்றோம் இப்படியே 18 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஒரு முறை நண்பனோடு சென்றிருந்தேன் கல்யாண ஆல்பத்தை காட்டினாள், கிரகப்பிரவேச ஆல்பத்தை காட்டி னாள் பார்த்து விட்டு தேநீர் அருந்தி கண்ணீரோடு வீடு வந்தடைந் தேன் (கண்ணீரென்றால் கண்குளிர்ச்சி)

எனக்கும் அவளுக்குமான பந்தத் தில் எனக்கு இதுவரை இதற்கு மேலும் இப்பேறப்பட்ட ஆத்மா கிடைக்கவு மில்லை கிடைக்கப் போவது மில்லை

அவளுக்கு மட்டும் கிடைத் திருக்குமா என்ன...?!

## கனாக்கண்டேன்

பள்ளிப் பருவத்தில் அறிமுகமாகி
பள்ளத்தில் எறிந்தகல் தவறி
பாவை உள்ளத்தில் குடியேறி
பாட்டுப்பாடவொரு கனாக்கண்டேன்

துளிகூடச் சலனம் இன்றி
துள்ளி விளையாடிக் களைப்பாகி
தென்னந்தோப்பில் இளநீர் அருந்தி
தெம்பாகவொரு கனாக்கண்டேன்

அவளுடன் நானும் அன்பாகி
அரவணைப்பில் மதி மயங்கி
ஆத்தோர மணலில் தூங்கி
ஆறுதலடையவொரு கனாக்கண்டேன்

கண்பட்டுக் கறுத்துக் கருகி
கண நொடியில் கசிந்துருகி
கானகத்தில் வழி தவறி
காத்திருக்கவொரு கனாக்கண்டேன்

நிழல் உருகி நிஜமாகி
நிஜமும் நிழலும் நெருப்பாகி
நீங்காத்துயரில் நான் மூழ்கி
நீண்டதொரு கனாக்கண்டேன்

**பிரிய நிலவன் செகா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரை வதைக்காதே...

ஐம்பூதங்களை அரணாக்கி அழகிய அகிலமதை வடிவமைத்தான்,
அனைத்தையும் ஆண்டிடவே தேய்ந்திடா சக்தியை உருவாக்கினான்,
ஒன்றோடொன்று பிணைந்து இணைந்து வாழ்ந்திட வழிகாட்டினான்,
உறவாடி மகிழ்ந்திடத்தான் அன்பெனும் மொழி தேக்கினான்,
யாவும் வாழும் உலகே இயற்கை என்றாக்கினான்,
அவனே இல்லை என்றோரையும் அவனோடு இசையாக்கினான்,
தேடித்தேடி தொலையும் வாழ்வில் எளிமையை முதன்மையாக்கினான்,

ஆசை துறந்து அனைத்தும் அறிந்தவனை ஞானியாக்கினான்...
உயிரென்ற ஒன்றை உள்ளே வைத்து உடலாக்கினான்,
உடலதை கட்டிப்போடும் ஆசைக் கடலை மனமாக்கினான்,
வழிகள் ஆயிரமிருந்தும் வரையறைக்குள் வாழும் நெறியாக்கினான்,
நல்லதை அறிந்தே தீயதை விலக்க பகுத்தறிவாக்கினான்,
ஒவ்வொன்றும் ஓரளவில் வாழத்தான் உலகினை உருவாக்கினான்,

யாவையும் அழித்து நான் மட்டும் வாழ்வேன்
எனும் அகந்தையை யாராக்கியதோ..?
நீ வாழ அவை வாழ வேண்டும்,
அவை இன்றி நரகமே உனைத் தீண்டும்,
உனைப் போலே உயிருண்டு உணர்ந்திடும் மனமுண்டு,
உயிரை வதைக்காதே - நீயும் சிதைக்காதே அழகிய உலகை,
நேசிக்கப் பழகு யாவும் நட்பாகும்
எதுவும் அழகாகும்...

**கவிக்காதலன் குலசிங்கம் கிலசன்**

## ஹைக்கூ

அழுத்தி முத்தமிடுகையில்,
அப்பிக் கொள்கிறது,
குழந்தையின் வாசனை.

அவள் பின்னால்
அலையும் வண்டுகள்
சேலையில் பூக்கள்.

தேர்தல் தினம்
விற்பனையாகிறது
ஜனநாயகம்.

தாமரையை நோக்கி
நகரும் சூரியன்
ஊர்க்குளம்.

நீ இரசித்த பின்தான்
அழகு பெறுகிறது
என் கவிதைகள்.

விலையேற்றம்
போதவில்லை
மாதச்சம்பளம்.

**அய்ஷத்அப்சத்**
பாலமுனை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முற்றுப்புள்ளி

சொந்த பந்தம் குடும்பம் நண்பர்களென அனைவரும் சேர்ந்து எங்களை ஆசீர்வதித்தார்கள்.

முதலாம் மாதம் இரண்டாம் மாதமென இரண்டு மாதங்களும் மிக சீக்கிரமாய் முடிவுற்று மூன்றாம் மாதத்திலிருந்து நல்ல செய்தி இல்லையாவென கேட்க ஆர்ம்பித் தார்கள் எல்லோரும்.

முதலில் வெட்கப்பட்டு பின் இல்லையென பதில் சொல்லி அடுத்து இல்லையே என சலித்துச்சொல்லி இன்னும் கேள்விகள் ஓங்க ஓங்க இன்னும் இல்லையே என முகம் கோணி இன்னுமின்னும் கேள்விகள் கேட்க துன்பப்பட்டு சில நேரங்களில் பக்குவப்பட்டு மாதம், வருடமெல்லாம் விரைவாக ஓட ஓட எல்லா நாட்களுமே இரணமாகியது.

மாமியாரின் குத்தலும், அண்ணியாரின் சீண்டல்களுமே நெஞ்சு முழுக்க ரணமாய் தைத்தது!!

எல்லா பக்கமும் வார்த்தைகள் தாக்க என்னவன் மட்டுமே கலங்காதே நானிருக்கிறேன் என்றான்!!

நாமிருவரும் சம்மந்தப்பட்ட விஷயத்தில் நீ மட்டும் எப்படி பொறுப்பென என் தலையை அவன் மடியில் கிடத்தி அடிக்கடி ஆறுதல் சொல்வான்!!

என்னை திட்டாமல் உன்னை மட்டுமே ஏன் எல்லோரும் குறி வைக்கின்றார்கள் என அடிக்கடி புலம்புவான்.

நாம் இருவரும் சேர்ந்து செய்வதறியாது தனிமையில் அழுது தீர்த்த நாட்கள் பல. எனக்கும் சேர்த்து அவன் கண்ணீர் சிந்துவான்.

பத்து வருடமும் முடிந்து போக குழந்தையொன்றை கொடுத்தான் இறைவன். அழகானதொரு ஆண் குழந்தை.

இப்போது நிம்மதியாய் இருவரும் இருக்கின்றோம். அவர் சொல்வார் அப்படியே அவன் உன்னை மாதிரியென. நான் சொல்வேன், இல்லைங்க அவன் உங்களை மாதிரித்தான் என!!

வாழ்வில் நான் பட்ட வேதனையும் துன்பமும் இந்த குழந்தை வந்து முற்றுப்புள்ளி வைத்து விட்டானென மகிழ்ச்சியாய் இருக்கின்றேன்.!!

நன்றி ஆண்டவரே..

**- சஞ்சய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கம்பளிப் புழு

ரத்னராஜு
ராஜராஜேஸ்வரன் ரத்னசபாபதி
சென்னை

காலை ஆறு மணிக்கெல்லாம் அந்த வெள்ளாளத் தெரு பரபரப்பாயிருந்தது. சினிவாசன் குடும்பத்துடன் வெளியே போவதால் வீட்டைப் பூட்டி சாவியை தன் அம்மாவிடம் கொடுத்து வர மகள் பானுவை அனுப்பினான். போன வேகத்தில் பானு பயந்தபடி ஓடிவந்தாள்; வார்த்தை வரவில்லை. ஏதோ விபரீதம் என உணர்ந்து சீனி வாசன் ஓடிப் பார்த்ததில் அம்மா ராமாமிர்தம் தூக்கத் திலேயே மாரடைப்பால் மரண மடைந்திருந்தாள். செய்தியைக் கேட்ட பூங்காவனம் காபியைக்கூட குடிக்காமல் ஓடினாள். அவளின் ஆருயிர்த் தோழியல்லவா அவள்.

"ஒன்னாத்தான் இருந்தோம்
ஒன்னாத்தான் போவோம்னா
பொண்ண பொலம்பவிட்டு
கண்ண கலங்கவிட்டு
சொல்லாம போய்ட்டியே
பொல்லாத அமிர்தா"

என்று ஒப்பாரி பாடிய படியே இருந்தாள். அன்று மதியம் மூன்று மணிக்கு உடல் மயானத்துக்கு கொண்டு செல்லும் வரை எதுவும் சாப்பிடாமல் உட்கார்ந்திருந்தவள் அதன் பின்தான் வீட்டுக்கு போனாள்..

வீட்டுக்கு வந்து குளித்து விட்டு மருமகள் தந்த சாப்பாட்டை சாப்பிட்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு வெற்றிலைப் பெட்டியுடன் வீட்டுத் தாழ்வாரத்தில் கால் நீட்டிக் கொண்டு உட்கார்ந்தாள். பாட்டி வந்தவுடன் கண்ணன் ஓடிவந்து பாட்டி தொடை மீது உட்கார்ந்து கொண்டு தன் சோடா மூடி சுற்றும் விளையாட்டை தொடர்ந்தான்.

வெற்றிலை போடாமல் பாட்டி யோசித்துக் கொண்டிருப்பதைப் பார்த்த கண்ணன் கேட்டான், "என்ன பாட்டி ஒரே யோசனை"

"ஓசியில வெற்றிலை போட இனிம அவ வரமாட்டா"

"அவங்க நல்லவங்க இல்லையா"

"சேச்சே.. அப்படியெல்லாம் சொல்ல முடியாது கண்ணா. அவளோட கதையக் கேட்டா கல்லும் கண்ணீர் வுடும்"

"பாட்டி... பாட்டி... அந்த கதையச் சொல்லு"

"உனக்கு போர் அடிச்சா சொல்லு நிறுத்திடறேன்" என்று சொல்லி விட்டு ராமாமிர்தத்தின் வரலாற்றை சொல்ல ஆரம்பித்தாள் பூங்காவனம்.

"ராமாமிர்தம் கல்யாணம் ஆகி வந்த போது ஊரே ஒன்றுகூடி நின்று பார்த்தது; உண்மையாகவே இவள் பெயர் ராமாமிர்தம் தானா இல்லை ராஜகுமாரியா? அப்படியே அச்சு அசலாக டி.ஆர்.ராஜகுமாரி என்ற நடிகை போலவே இருந்தாள். ஊரிலுள்ள பெண்களெல்லோரும் அவ ளோடு சினேகம் வைத்துக் கொள்ள ஆசைப்பட்டார்கள். பெண்களே இப்படி யென்றால் ஆண்களின் நிலையைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. கடைத் தெருவுக்கோ, பஸ் ஸ்டாண்டுக்கோ போக நேர் வழி இருக்கும் போதே இவர்கள் ராமாமிர்தம் விட்டின் தெருப் பக்கமாகவும், கொல்லைப் பக்கமாகவும் சுற்றிக் கொண்டு போவார்கள். ஒரு மின்னல் போலவாவது கண்ணில் பட மாட்டாளா என்று ஏக்கப் பார்வை பார்த்தபடியே போவார்கள்."

"ராமாமிர்தம் கல்யாணம் ஆகி வந்த அதே நேரத்தில்தான் நானும் கல்யாணம் ஆகி வந்திருந்ததால் ரெண்டு பேரும் ஒத்த வயசு தோழி. பெரும்பாலும் இரண்டு பேரும் ஒன்னாவே இருப் போம். ஆற்றில் குளிக்கப் போகும் போதும் ஒன்றாகத்தான் போவோம்; அந்த நேரம் ஆற்றங்கரையில் அந்த ஊர் ஆம்பிளைங்க போக்குவரத்து கட்டுக்கடங்காம இருக்கும்.

பூங்காவனம் இனிமே நாம ஆத்துக்கு குளிக்க வர்ரது வேண்டாம்'

'நானும் அதுதான் நெனைச்சேன் அமிர்தா'

பின்னர் வீட்டிலேயே குளிக்க ஆரம்பிச்சோம்.»

"கிணத்தடியிலியா பாட்டி» பேரன் கேட்டான்.

"ஆமாம் கண்ணா. ராமா மிர்தத்தின் புருசன் கனகராசுவுக்கு ஒரு பெரிய கூரை வீடும், அது பின்னாடி பெரிய தென்னந் தோப்பு, அதுல சுமாரா இருநூறு தென்னை மரம் இருந்திச்சு. . காவிரி ஆத்தோட தென்னன்ட கரையில ஒரு ஏக்கர் படுகை இருந்துச்சு.. அதுல வாழைதான் அதிகம் பயிர் பண்ணுவாங்க"

"பானுவோட அப்பாவும், மாரி முத்துவோட அம்மாவும் அந்த பாட்டியோட புள்ளைங்களா" பேரன் கேள்வி.

"ஆமாம். ஆணொன்னு பெண் ணொன்னு ரெண்டு செப்புச் சிலைங்க பெத்து வளர்த்தா. கனகராசுவுக்கு தென்னந் தோப்பு, வாழைக் கொல்லை வேலையே சரியாயிருக்கும். அதை யும் மீறி ஏதாவது வேலைக்குப் போகனுமுன்னா வேலி கட்டுகிற வேலைக்குத்தான் போவும். படுகையில் வாழை கன்னு நட்டு குருத்து கிளம்பி விட்டது. இந்த நேரத்தில பார் வெட்டி அணைக்கனும். அதாவது ஒவ்வொரு இரண்டு வரிசைக்கும் இடையில நீளமா மூன்றடி ஆழம் குழி வெட்ட வேணும். வாழையை பாதிக்காமல் நீள நீளமான அந்த குழியிலதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணீர் நிற்கும்; வாழைக்கு பாதிப்பு இருக்காது. அப்புடி பார் அணைக்க காலையிலேயே இரண்டு ஆளோடு கனகராசு போயிடுச்சு. திரும்புறப்போ பரிசல்காரர் வீட்டுக்குப் போய்ட்டார். காவிரியில் இடுப்பளவு தண்ணீர்தான, நீந்தியே போயிடலாம்ன்னு மூனு பேரும் வந்தாங்க. காலையில இருந்ததை விட இப்போ அதிக நீர்; வேகமும் அதிகம். மண்வெட்டியை தோளில மாட்டிகிட்டு நீர்ல நீச்சல் போட்ட கனகராசு எதிர்பாராமல் மல்லாந்து சாய்ஞ்சிச்சு; மண் வெட்டி ஆள அமுத்திச்சு; காப்பாத்த கூப்பிட்டது மத்தவங்களுக்கு கேட்கல; கரை யேறின பிறகே கனகராசுவைக் காணாததால கரையோரமாகவே தேடி னாங்க. இருட்டிவிட, அதுக்கு மேல தேட முடியாதுங்கறதால நேரே கும்பகோணம் பாலக்கரையில போய் காத்தி ருந்தாங்க. ஆனால் காலையில பிணம் சாமிமலை பக்கத்தில நாணல் புதர்ல கரை ஒதுங்கி இருக்கறதா தகவல் வந்திச்சு.

இருபத்தைஞ்சு வயசில ஐஞ்சு வயசு ஆண், மூனு வயசு பெண் குழந்தைங்களோட ராமாமிர்தம் தனிமரமானா.

அவளோட மச்சினர், ''அண்ணி, என்ன செய்யறதா உத்தேசம்''ன்னு கேட்டான்.

''உன்னோட அண்ணன் இல்லைன்னாலும் புள்ளைங்கள வளர்த்து ஆளாக்கனும்; உன்னால முடிஞ்சா ஒத்தாசை பண்ணு'' ன்னாள்

''நாங்க என்னதான் செஞ்சாலும் அண்ணன் இருந்து செய்யறது போல இருக்குமா? நல்ல யோசனையா சொல்றேன்; வீடு, தோப்பு, படுகை எல்லாவற்றையும் என்னிடமே வித்து காசாக்கிக் கிட்டு, உன் பிறந்த வீட்டுக்கு போறது நல்லது; இந்தமாதிரி வர்ர பொண்ணுங்கள எந்த தாய் தகப்பனும் விட்டுட மாட்டாங்க.''

அவ ஏத்துக்கல.

இனிம நான் இந்த ஊரு பொண்ணுதான்'' ன்னு மறுத்துட்டா.

## என்னவனே

எனக்கான தெல்லாம் உனக்காக என்று
ஒதுக்கிய. போது நான் தன்னிலை மறந்து போக,
என் நினைவுப் பூங்காவில் மலரும் பூக்கள் அத்தனையிலும்
உன் முகம் காண்கிறேன்

நான் சுவாசிக்கும் மூச்சுக் காற்றில் கூட நீயே உலவ,
என்ன மாயம் செய்தாயோ
உன் கண் வழி புகுந்து இதயத்தில் ஐக்கியமாகி விட்டேன்

என்னவனே எனை நீங்கி தொலை தூரம் சென்ற தேனோ
உன்னைக் காணாத நெஞ்சு காற்றாடி
போலாக, சோதனையில் வேதனையுறச் செய்யாதே

விம்மி வெடித்து வெந்தணலில் வேகுதடா எனதுள்ளம்
எனைப் புரிந்தவன் அறிந்தவன்
நீ என் துயர் களைய ஓடி வந்து விடு
என்னவனே எனையாளும் மன்னவனே

**ஸாமிலா**
களுத்துறை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் அப்படித்தான்

இரவுகளை எடுத்துப் பூசி
அலங்காரம் செய்தவள்
எங்கெங்கோ நின்று - என்
எண்ணங்களையெல்லாம்
ஈர்த்தவள்

என் தனிமை வயலின்
வரப்புகள் நெடுகிலும் - என்னை
துண்டு துண்டாய் விதைத்தவள்

நேசக்குடங்களில் நீரள்ளி
கொடி இடையினில் முடிச்சிட்டு
பிரார்த்தனைகளுக்கு
பிராயச்சித்தமாய் - என்
நெஞ்சம் நிறைய வார்த்தவள்

கன்னம் முழுவதும் கீறிட்டு வழியும்
வலியின் துளிகளுக்கெல்லாம்
துண்டுத் தாவணியால் ஒத்தடம்
கொடுத்தவள்

பிரபஞ்சம் பேசுமளவு
காதல் பின்னங்களை எடுத்து
வண்ணம் தீட்டி வடிவு பார்த்தவள்

காமப் பிசாசுகளை கட்டிவைத்து
கன நேரம் பேசியவள்

காதலுக்கும் காமத்திற்கும்
நடுவில் நின்று பக்குவமாய் பேசி
பாதை தேடி பத்திரமாய் பிரிந்தவள்

நித்திரையில் கூட நித்தமும் வருபவள்
கனவுகளை கூட காயம் செய்யாது
ஓரமாய் இருந்து
ஒய்யாரமாய் நடை பயின்று
மறு கணமே மறைபவள்

வார்த்தைகளில் கூட வரம்பு
மீறாதவள்
வாழ்க்கைத் துணையாகி
என் இணையானவள்
எனக்கு மனையானவள்
எங்களுக்குக் குடையானவள்

அந்தக் கறுப்பழகி அப்படித்தான்

**- பாலமுனை றிஸ்வான்**

மறுத்துட்டாளே தவிர வாழ்க்கை அவளுக்கு அத்தனை சுலபமா இல்லை.

''ஐயோ.. தனியாவா இருந்தாங்க'' பேரன்

"ரெண்டு புள்ளைங்களக் காப்பாத்தவருமானம்தேவைங்கறகட்டாயத்தில அவ இருந்தா. வெளி வேலைக் கெல்லாம் போவ முடியாது; வீட்டிலிருந்துதான் வருமானம் தேடனும். மாசந் தோறும் தேங்காய் மூலமா ஒரு வருமானம் வந்திச்சு. தென்னை மரங்கள்ல கசடு எடுப்பாங்க; மரத்திலேறி பச்சை தென்னை மட்டைகள்ல அடிப்பாகத்தில் இருக்குற கங்கு ஓலைங்கள கழித்து விடுவாங்க; பன்னாடைகளை பிய்த்து போடுவாங்க; மரத்தில மிஞ்சியிருக்குற பாளைங்க, கூறாஞ்சிகள வெட்டி விடுவாங்க; காய்ஞ்ச தென்னை ஓலை மட்டைகளை பிடுங்கி எறிவாங்க. இது மரத்துக்கும் ஆரோக்கியம்; தோப்புக்காரருக்கும் வருமானம். இது ராமாமிர்தத்துக்கு முழு நேர வேலை வாய்ப்பு."

''பத்து பத்து பாளைகளா கட்டி குட்டை தண்ணீரில ஊறப் போட்டு கிழிச்சு பாளை முடி முடிச்சாகக் கட்டி விற்பாள். இத வேலி கட்டவும், கூரை வேயும்போது கீற்றைக் கட்டவும் வாங்கிப் போவாங்க.

பச்சை கங்கு ஓலைகளைக் கிழிச்சு தென்னந் துடைப்பம் கட்டி விற்பா. இந்த கங்கோலை விளக்குமாறு சத்தமெழுப்பாம பூப்போல பெருக்கும். வெட்டிப் போட்ட காய்ஞ்ச தென்னை மட்டைகளை குட்டைத் தண்ணீரில அமிழ்த்தி ஊறவைச்சு கிழிச்சு கீற்று பின்னி விற்பாள். ஓலையின் அடி மட்டையும், கூறாஞ்சியும் அவளுக்கு அடுப்பெரிக்க சரியாயிருக்கும்.

இப்படி வயிற்றுப் பாட்டுக்கு உழைக்கவே நேரம் சரியாயிருக்கும்.

ஆண் துணை இல்லைங்கறத சாதகமாக்கிக் கிட்டு யாராவது உதவிக்கு வர்ரதப் போல நெருங் கறதா தெரிஞ்சா அதுக்கு இடம் கொடுக்க மாட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேள் போலக் கொட்டி விரட்டி விடுவா. ஆண்கள் நெருங்கவே பயப்படுவாங்க.

"அழகாயிருக்கிற திமிர்" அப் படிம்பாங்க.

ஆண்கள் மட்டுமில்லாம பெண்களையும் தள்ளியே நிற்கும் படி வைச்சிருப்பா. கொஞ்சம் இடம் கொடுத் தாலும் அவுங்க வீட்டுக்குள்ள வந்து போனா கண் காது மூக்கு வைச்சுபேச ஆரம்பிச்சடுவாங்க. 'ராமாமிர்தமா? அவகிட்ட யார் போய் பேசுவா? சரியான பஜாரி" ன்னு பட்டத்தை அவளுக்கு ஊரே சேர்ந்து கொடுத்திருந்திச்சு

"பஜாரின்னா என்னா பாட்டி".

"சண்டக்காரின்னு அர்த்தம். ஆம்பளைங்க அவ அழகுல மயங் கினாலும் அது எல்லாமே மறைஞ் சிருந்து பார்க்கும் மர்மம்தான். எந்த ஆம்பளையும் அவளை நேர் கொண்டு நிமிர்ந்து பார்த்துட முடியாம தவிச்சான்னுதான் சொல்லனும். அவளோட தென்னந் தோப்பிலோ, படுகையிலோ வேலைக்கு வர்ர ஆட்கள் கூட அவகிட்ட தலை குனிஞ்சபடிதான் பேசுவாங்க. அதுக்கு அவ மேல உள்ள பயம் காரண மில்ல; அவங்க மேலேயே உள்ள அவநம்பிக்கையே. எங்க நிமிர்ந்து அவ முகத்தைப் பார்த்து பேசறப்போ மனம் சலனப்பட்டுடுமோ; அத நம்ம கண்ணே காட்டிக் கொடுத்துடுமோங்கிற பயமே காரணம். ராமாமிர்தம் ரொம்பவும் இரக்க சிந்தை உள்ளவ."

"அவளால யாருக்கும் எந்த உபத்திரவமும் இல்ல; சொல்லப் போனா உபகாரமாகத்தான் இருக்கும்."

"அவ மேலெல்லாம் முள்ளா காட்சியளிக்குற வேர்ப்பலா.

தன்பாட்டுக்கு ஊர்ந்து செல்லுற கம்பளிப்புழு யாரையும் தேடிப்போய் ஒட்டி அரிப்பை கொடுக்கிற தில்லை; அதன் மீது ஒட்டுறவுங்க அவங்களேதான் அரிப்பை தேடிக் கிறாங்க. அத போலத்தான் ராமாமிர்தம் தன் பாதுகாப்புக்காக தன்னைச்சுத்தி ஏற்படுத்திக் கிட்டதுதான் இந்த சிடு சிடுப்பு; இந்த தடுப்பு அரணைத் தாண்டி யாரும் உள்ளே வரப் பயந்தாங்க.

கொஞ்சம் கொஞ்சமாக சேர்த்து தன்னுடைய ஒரு ஏக்கர் படுகைக்கு பக்கத்திலேயே விலைக்கு வந்த ஒரு

# ஆசை மச்சானே..

( கிராமியக் கவிதை )

கட்டிலில நீ துயில
சன்னல் வழி செங்கதிரு
சன்னமா உன் மீது படர..
செம்பழுக்காய் நீ மின்ன ..
சேர்த்தணைக்க ஓடி வாறேன்..

எட்டி நின்னு பார்ப்பது
இன்னும் எத்தனை நாளு..?!
நீ படுக்க பாயாவேன்
நிம்மதியா கவலை மறந்து உறங்கிடுவ..

தோட்டத்து பூக்களெல்லாம்
பூத்து நிக்க. ..
நீ வரும் வழி பார்த்து
நானும் காத்து நிக்க..
ஏக்கத்துடன் பெருமூச்சில்
ஏகத்துக்கு அத்தனையும் வாடுறதே..

நேத்து பட்டாம்பூச்சி தொட்ட விரலுல
கறுத்த நிறம் ஒட்டிக்கிச்சு..
உன் தேகத்துல
உழைச்சு பூத்த வியர்வையத்தான்
முட்டா மஞ்சளா நான் பூசோணும்..

என் மாமன் பெத்த மகராசா
அழகா மனச தைச்சாயே..
மனசெல்லாம் உன் நேசம்..
சுவாசமெல்லாம் உன் வாசம்..
இதயம் முழுக்க ஆக்ரமிக்க
உயிலு ஒன்னு எழுதி வெச்சேன்..

ஆயுளுக்கும் பட்டா போடு..
ஆசை தீர வாழணும்னு
கருப்பங்கிட்ட வேண்டி கிட்டேன்..
அச்சாரம் போட நீ வருங்காலம்
எப்போது..?! என் ஆசை மச்சானே..

**சாரதா க. சந்தோஷ்**
ஐதராபாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக்கர் நிலத்தையும் வாங்கினாள்.

மகளை உள்ளூர் பள்ளியின் எட்டாம் வகுப்போடு படிப்பை நிறுத்திட்டா. அதற்கு மேல் படிக்க வேணும்னா ஐஞ்சு கிலோமீட்டர் நடந்து தான் போகனும். ஆனால் மகன் பன்னிரண்டாம் வகுப்பை முடிச்சிட்டான். தேங்காய் வியாபாரத்தில் இறங்கி னான். ஆட்களை வைச்சு தோப்பிலிருந்த தென்னை மரங்களோட ஊரிலிருந்த தென்னையிலிருந்தும் தேங்காய் பறிச்சு உரிச்சு சென்னை வியாபாரிக்கு அனுப்பத் தொடங்கினான்.

அந்த பதினெட்டு வருடங்கள் ராப்பகலாக உழைச்ச பலன் நல்ல இடத்தில மகளைக் கட்டிக் குடுத்தா. ரெண்டு ஏக்கர் படுகையையும் மகளுக்கே எழுதிக் குடுத்தாள். அடுத்த வருடமே மகனுக்கும் கல்யாணம் முடிச்சுட்டா.

"அதுதான் பானுவோட அப்பாவா"

"ஆமாம் கண்ணா, அந்த வீட்டை மகனுக்கே குடுத்துட்டு கொஞ்சம் தள்ளி தனக்காவ ஒரு சின்ன கீத்து வீடு கட்டிக் கிட்டா. தன்னோட வருமானத்துக்கு வலியன் அரிசி வியாபாரம் ஆரம்பிச்சா. வலியன் அரிசின்னா என்னான்னு தெரியுமா... குடிசைத் தொழில் அரிசி வியாபாரம். அப்பப்ப ரெண்டு மூட்டைங்க வீதம் ஐ ஆர் 20 நெல் வாங்கி வருவா. ஒரு தடவைக்கு ஆறு மரக்கால் வீதம் ஊறப் போட்டு வேகவைத்து காயவைத்து மிசினில் கொடுத்து அரைச்சுகிட்டு வருவா. வீட்டு அரிசிங்கறதால , அரிசி வாங்கி சாப்பிடுற சனங்கள் இதை விரும்பி வாங்குவாங்க. இந்த வலியன் அரிசி வியாபாரம் கிராமத்தில பல பேருக்கு சோறு போடுது"

"இப்புடி தன்னோட உழைப் பையே நம்பி வாழறவதான் ராமாமிர்தம். இந்த உலகில தன்னை காப்பாத்திக்க அவ அணிஞ்சுகிட்ட கவசந்தான் சிடுசிடுப்பு. அந்த கம்பளிப் புழுவின் மொசுமொசு தோல்; அது யாரும் அவளை நெருங்க விடாமல் காப்பாத்திச்சு."

"அவளோட கூரை வீட்லருந்த சிறிய சன்னல் வழியா அடிக்கடி தன்னோட பேத்தியப் பார்ப்பா. அது அவளையே பத்து வயசுல பார்க்கறது போல இருக்கும்; கண் கொட்டாம பேத்தி விளையாடுறதையே நேரம் போறது தெரியாம பார்த்துக் கிட்டிருப்பா. சீனிவாசன் பலகாரம் வாங்கியாந்தா' அப்பா வாங்கி வந்தார்'ன்னு சொல்லி பேத்தி பலகாரங்கள கொண்டாந்து கொடுத்துட்டு ஓடிடுவா".

"பானு பாட்டி வீட்ல போய் வெளையாடாதா"

"வெளையாடெல்லாம் மாட்டா; ராமாமிர்தமும் மகன் வீட்டுக்கு போக மாட்டா. ராமாமிர்தம் தேடிவந்து பேசுறான்னா அது நான் மட்டுந்தான்"

"பாட்டி, ஒங்க ரெண்டு பேருக்குமே ஒரே வயசு தான; அப்பறம் ஏன் அந்த பாட்டிக்கு இப்படி ஆச்சு"

"அவ என்னைப் போல இல்ல; நாள் முழுக்க ஓயாம உழைச்சு கிட்டே இருந்தா. அது அவ ஒடம்ப பாதிச்சிடுச்சு. ஒடம்பு உள்ளுக்குள்ளியே வியாதி இருந்திருக்கு; அவ வேணுமின்னே அதுக்கு வைத்தியம் பாத்துக்கல; இப்ப எல்லாரையும் விட்டுட்டு போய் சேர்ந்திட்டா.

புருசன் போனபின்னாடியும் தன் னம்பிக்கை இழக்காம, தன் உழைப்பை நம்பி முயற்சியால உயர்ந்தவ அவ"

இப்படி சொல்லிவிட்டு பூங்கா வனம் பாட ஆரம்பித்தாள்.

"ஒன்னாத்தான் இருந்தோம்
ஒன்னாத்தான் போவோம்னா
பொண்ண பொலம்பவிட்டு
கண்ண கலங்கவிட்டு
சொல்லாம போய்ட்டியே
பொல்லாத அமிர்தா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காதலெனும் காவியம்

குறுந்தொகைப் பாடலில் தலைவனும் தலைவியும்
உறுதியான காதலில் உள்ளக்கடலில் நீந்திடுவர்
சுறுசுறுப்பான தோழியர் தலைவிக்கு உதவுவர்
விறுவிறுப்பான காதலில் ஊடல் வாடல்கள் உண்டு

இன்றையக் காதலில் காதலன் காதலியென்பார்
நன்றென அலைபேசிகளே தோழ தோழியராவர்
என்றும் மணிக்கணக்கில் பேசி மகிழ்ந்திடுவர்
நன்றாய் வளரும் காதலிலும் சண்டைகளுண்டு

நகைச்சுவைப் பேச்சில் தொடங்கும் காதலுணர்வு
வகைதொகையின்றி வளர்ந்து உண்மைக் காதலாகும்
பகைகள் எதிர்த்து நின்றாலும் வீரமாய்ப் போராடும்
மிகையான சாதிமத வேறுபாடுகளையும் கடந்திடும்

புரிதல்களின் புனரமைப்பில் புதுப்பூவாய்ப் பூத்திடும்
பிரிதல்களிலும் பிணக்கின்றிப் பாசத்தில் திளைத்திடும்
விரிதல்களின்றி மன ஒருமைப்பாட்டில் நின்றிடும்
சரிதல்களில்லாது சமத்தாக வளர்ந்து செழித்திடும்.

விழிகளில் விளைந்திடும் ரசாயனத்தின் மகிமையிது
மொழிகளின்றியும் செழித்து வளரும் வனப்பாகும்
பழிகள் சூழ்ந்திடினும் தகர்த்தெறிந்து முன்னேறிடும்
வழிகளைச் செப்பனிட்டுக் காப்பியக் காதலாகுமே.

இதயங்களின் இணைப்பில் இனித்திடும் காதலாய்
உதயமாகும் வெண்ணிலவின் குளிர்ச்சியில் நனையும்
சுதந்திர எண்ணங்களில் தலை நிமிர்ந்து நின்றிடும்
நிதமும் வளர்ந்து காவியக் காதலாக நிலைததிடுமே.

**கவிஞர் ராம்க்ருஷ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியாகச் சுடர்

## - அனுராஜ்

வேலு நாச்சியார். சிவகங்கைச் சீமை பெருமையுடன் உச்சரிக்கும் ஒரு உன்னதப் பெயர். பரந்து பட்ட பாரதக் கண்டத்தின் முதல் சுதந்திரப் போராட்ட வீராங்கனை. வரலாறு புறக்கணித்தும், மறைத்தும் விட்ட வீரமங்கை வேலு நாச்சியின் பல முகங்கள் இப்பரந்த மண்ணில் சரிவர வெளிச்சத்திற்கு வர வில்லை என்பது உண்மை.

ஆங்கிலேய அதிகாரிகளால் « டேர் டெவில் குவின் « என விளிக்கப் பட்ட அரசி.

சின்ன மறவர் நாடு என அழைக்கப்பட்ட சிவகங்கைச் சீமையின் மன்னர் முத்துவடுகநாதரை மணக்க பெரிய மறவர் நாடான இராமநாத புரத்திலிருந்து வந்த மங்கை வேலுநாச்சியார்.

முத்து வடுகநாதரும் ஆங்கிலே யருக்கு அடங்க மறுத்து, கப்பம் செலுத்தாமல் வீரகர்ஜனை புரிய, அவரோடு இணைந்து பரங்கியரின் பாதகச் செயலைத் தட்டிக் கேட்ட வீரப் பெண்மணி வேலுநாச்சியார்.

அரசனின் அவையில் மருது சகோதரர்கள் இருவர் படைத்தளபதி களாக இருந்தும், தன் பங்கிற்கு பெண்களை ஒன்றிணைத்து பெரும் படையை உருவாக்கி வைத்திருந்த வீரமங்கை வேலு நாச்சியார்.

மருது சகோதரர்களும் சாதா ரணமானவர்கள் இல்லை..பெரிய மருது என அழைக்கப் பட்ட வெள்ளை மருதோ, வெறுங் கரத்தால் வேங்கையை வீழ்த்தும் திறன் கொண்டவர், சின்ன மருதோ மிகச் சிறந்த விவேகி மட்டுமல்லாது வளரி எறிவதில் வல்லவரும் கூட. வீரமும், விவேகமும் இணைந்த இடத்தில் ஆட்சி யில் அமர்ந்திருந்தவர்களும் வீரத்தில் சோடை போகாதவர்கள் எனில் ஆங்கிலே யன் நடுங்காமல் என்ன செய்வான். சிவகங்கை என்றாலே சிம்ம சொப்பனம் தான் ஆங்கிலேய கும்பினியருக்கு.

வீரத்தில் சிறந்த முத்து வடுக நாத மன்னனோ சிறந்த சிவபக்தன். காளையார்கோவில் ஈசனை வணங் கிட வருவதாக இருந்தால், ஆயுதம் தரிக்காமல் வருவான். பக்தி செலுத்துமிடத்தில் பயமுறுத்தும் ஆயுத மெதற்கு எனும் கொள்கை கொண்டவனாய் இருந்தான். அதுவே பரங்கியருக்கு ஒரு வாய்ப்பாயும் அமைந்தது. இறைவனை வணங்க வந்த இடத்தில், சூழ்ந்தவர்கள் சூழ்ச்சி செய்து மாய்த்தார்கள். அரசனை மணந்தவளோ வீரமங்கையல்லவா, கண்ணீரா சிந்தினாள். இல்லை..!

ஆங்கிலேயரை வேரறுப்பதாய் வெஞ்சினம் கொண்டாள். மருதிருவர் தயவோடு, ஹைதர் அலியினை தொடர்பு கொண்டாள். பன்மொழித் தெரிந்த வித்தகி இவளது உருது மொழியின் இலாவகம் கண்டு உதவி புரிவதாய் உளமோடு உரைத்தான் ஹைதர்.

திருப்பாச்சேத்தி கோட்டை யைச் சேர்ந்த பாளையத்தின் கோபால் நாயக்கர் தயவில் சில ஆண்டுகள் தலைமறைவு வாழ்க்கை. கணவனின் மறைவிற்குப் பின் எட்டு ஆண்டுகள் அஞ்ஞாத வாசம். அந்த ஆண்டுகளில் அவள் சந்தித்த இன்னல்கள் தான் எத்தனை எத்தனை..!

தனது படைத்தலைவி குயி லியை அழைத்தாள். குயிலியும் வீரத்தில் சளைத்தவளில்லை. ஆங்கிலே யருக்கு வேலுநாச்சியைக் காட்டிக் கொடுக்க நினைத்த ஒரு கயவனது தலையை கொய்தவள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“குயிலி.. நாம் மீண்டும் சிவ கங்கையின் அரியணையில் ஏறும் நாளே, எனது வாழ்வின் திருநாள்..”

“உண்மை தான் அரசி.. ஆனால் இப்போது சிவகங்கை முழு வதும் ஆங்கிலேயர்களின் பலத்த கண்காணிப்பில் இருக்கிறது.”

“என்ன செய்யலாம்.? உனக்கு ஏதேனும் வழி தெரிந்தால் சொல்லேன்.!”

“விஜயதசமி திருவிழாவன்று ராஜராஜேஸ்வரி ஆலயத்திற்குச் செல்ல பெண்களுக்கு மட்டுந்தானே அனுமதி உண்டு. அந்த நாளையே வாய்ப்பாகக் கொண்டு உள்ளே நுழைந்தால் என்ன..?”

“அருமையான யோசனையை கூறியிருக்கிறாய் குயிலி. நமது பெண்கள் படையில் ஒவ்வொருவரிடமும் ஆயுதங் களைக் கொடு, இறைவனை வழிபட ஆலயத் திற்குள் நுழையட்டும்..சமயம் பார்த்து ஆங்கிலேயரை வெட்டிச் சாய்ப்போம்.”

தீட்டியத் திட்டத்தை செயல் படுத்த துவக்கினார்கள். விஜயதசமி நன்னாளில் ராஜ ராஜேஸ்வரி ஆலயத்திற்குள் நுழைந்தது பக்தர்க ளெனும் போர்வையில் மகளிர் படை.. சற்று நேரத்தில் ஒரே கூச்சலும் குழப்பமும். ஆங்கிலேயர்களின் தலைகளும், வெட்டுப் பட்ட கைகால்களும் மண்ணில் விழ, ஒரு கலவர பூமியாய் மாறி விட்டது சிவகங்கை.

அரண்மனைக்கு அருகிலேயே மிகப் பெரிய ஆயுதக் கிடங்கினை நிர்மாணித்திருந்தான் ஆங்கிலேயன். பீரங்கிகளும், வெடி மருந்துகளும், துப்பாக்கிகளும்தானே நம்மவரை விட அவனை வலிமையுடையவனாய் காட்டியது. ஒவ்வொரு கலவரத்தையும் அவன் அதனால் அல்லவா எளிதாய் அடக்கிக் கொண்டிருந்தான். குண்டுகளை உமிழும் துப்பாக்கிகளையும், பீரங்கி களையும் வாட்களும், வேல்களும் எவ்வளவு நேரம் எதிர்த்து நிற்கும்.

திடீரென ஒரு யோசனை குயிலிக்கு, கோயிலில் விளக்குகளுக்காக வைக்கப் பட்டிருந்த நெய்யையும், எண்ணையையும் உடலெங்கும் பூசிக் கொண்டவளாய், ஆங்கிலேயனின் ஆயுதக் கிடங்கிற்குள் குதித்ததோடு தனக்குத் தானே நெருப்பிட்டுக் கொண்டாள். பற்றி எரிந்த நெருப்பு ஆங்கிலேயனை திகிலுறச் செய்தது. ஆயுதங்கள் அனைத் தும் நெருப்பினில் வெடித்துச் சிதற தமிழ் மங்கை வேலுநாச்சியிடம் தண்டனிட்டு தலைகுனிந்தான். வீரமங்கை வேலுநாச்சி வெற்றித் திருமகளாய் சிவகங்கைக்குள் அடியெடுத்து வைத்தாள்.

குயிலியின் தியாகம் பொன் னேட்டில் பொறிக்கப்பட வேண்டியது. தன்னினம் காக்க, தன் நாட்டினைக் காக்க தன்னுயிர் மாய்த்த தியாகச் சுடர் அவளே.

# வேண்டும் உன் நேசம்

விழுந்த உன்னை விருப்பத்தோடு
தொழுது நானும் பெற்றேன் - நீ
அழுது என்னில் ஆசையோடு
அணைத்து முத்தம் பெற்றாய்..

உனக்காய் நானும் ஏங்கிய நாட்கள்
கணக்கில் இல்லை இப்போது - உன்
காலடி மண்ணை பூஜை செய்தேன்
கடவுளாய் நினைத்து அப்போது

கல்லில் நெஞ்சம் படைத்தவளே
சொல்லில் அடித்துக் கொன்றவளே - என்
சோகம் தீர வழி சொல்லு
வாதம் செய்ய வரவில்லை

வாசம் பூத்த மல்லிப் பூவே
வேசம் போட்டு மாறியதேனோ
பாசம் காட்டும் இதயத்தில் என்றும்
நேசம் வேண்டும் உன்னில் மீண்டும்

**ராஜ்பாரதி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியத்தில் இனியவள்

கருப்பெனினும்
கலைநயம் கொண்டவளவள்

கற்பெனினும்
பொறுப்பினிலே நிலைகொண்டவள்

அவள் கால் நடை
கலகலக்கும் லயம்
சில நேரங்களில்
என் செவியிலே புகுந்து
சிருங்காரச் சீற்றமிசைக்கும்


பருவ முட்கள் நிறைந்த
புருவ வில்
கொண்ட அவளை

என் தூண்டில் கண்களில்
சிக்க வைக்க
துள்ளித் துள்ளி
சுற்றி வருவேன்

அவள் அம்புவிழி நோக்க
குறிதவறாது
குத்தி விடுவாள்

அவள்
கம்பராமயணமோ
சிலம்போ
இரண்டில் ஒன்றில்
எப்போதும் இருந்தே இருப்பாள்
என்றே நினைக்கிறேன்

**கவியுலக நேசன்**





# எண்ணம் போல் வாழ்க்கை

வாழ்க்கை முழுவதும்
வண்ணங்கள்,
அவரவர் மனதில்
எண்ணங்கள்:
நேர்மறை எண்ணங்களை
விதைத்திடுவோம்!
எதிர்வரும் இன்னல்களை
புதைத்திடுவோம்!!
நல்லதை நினைப்பது
பலம்---
என்றும் வரலாம் ஊர்வலம்;
சிந்தனை மாற்றத்தை
உருவாக்கும்,
கண்களின் பார்வையை
தெளிவாக்கும்...
உலகம் புரண்டு
உருள்கிறது,
வெற்றியும் தோல்வியும்
நகர்கிறது.

# உறைந்த காதல்

மூலிகையாக உன்னை
நான் சுவாசிக்கிறேன்,
உன் வானவில்
சிரிப்பையும் நேசிக்கிறேன்;
உறைந்து நிற்கிறேன்
உன் நினைவால்,
என்னை குணப்படுத்து
ஒரு கனவால்!

**வெ.ஹேமந்த் குமார்,**
**ஈரோடு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடப்பதெல்லாம் நன்மைக்கே



**T.பாலகிட்டினப்பிள்ளை**
புலோலி

அண்ட சராசரங்களை இம்மியும் பிசகாமல் இயக்கத் தெரிந்த இறைவனுக்கு நம்முடைய வாழ்வை இயக்குவது எப்படி என்று சரிவரத் தெரிவதில்லை என்பது நம்மில் பலருடைய அபிப்பிராயமாக இருக்கிறது. அதனால் தான் தினந் தோறும் எனக்கு அதைச் செய், இதைச் செய் என்று பிரார்த்திக்கிறோம், ஏன் இப்படிச் செய்தாய், ஏன் அப்படிச் செய்தாய் என்று கேள்வி கேட்கிறோம். பல சமயங்களில் எதை எப்போது செய்ய வேண்டும் என்று கூட இறைவனுக்குத் தெரிவிக்கிறோம். இறை வனை வணங்கி விட்டு இப்படி நாம் அதற்குக் கூலியாகக் கேட்கும் விஷயங்கள் ஏராளம்.

இறைவனிடம் கேட்காமல் யாரிடம் கேட்பேன் என்று பக்தன் கூறுவதில் ஒரு நியாயம் இருக்கிறது என்பது உண்மையே. ஆனால் கேட்பதெல்லாம் நியாயமாக இருக்கிறதா என்பதே கேள்வி.

செயலுக்கு எதிரான விளைவைக் கேட்காதீர்கள்.

பரீட்சை நெருங்கிக் கொண்டிருக்கிறது. படிக்க மாணவனுக்கு நேரமும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நன்றாகப் படித்தால் தான் நல்ல மதிப்பெண் பெற முடியும்என்பதைஇறைவன்தந்திருக்கிற அறிவு தெரிவிக்கிறது. ஆனால் கிரிக்கெட் தினமும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாவதைப் பார்க்காமல் மாணவனால் இருக்க முடியவில்லை. கிரிக்கெட் பார்க்கிறான். வேறு பொழுது போக்குகளிலும் நேரத்தைப் போக்கி பரீட்சைக்கு இரண்டு நாள் முன்பு தான் படிக்க ஆரம்பிக்கிறான். படித்தது போதவில்லை. பரீட்சை நன்றாக எழுதவில்லை. வெளியே வந்தவன் தேர்வு முடிவு வரும் வரை தினமும் கோயிலிற்குச் சென்று மனம் உருக வேண்டுகிறான்.

'உள்ளம் உருகப் பிரார்த்தித்தால் இறைவன் செவி சாய்ப்பான்' என்று பெரியோர் சொல்வதை அவன் நம்புகிறான். அப்படி நம்புவதை அவன் இறைவனுக்கும் தெரியப்படுத்துகிறான். இறைவன் என்ன செய்வார் சொல்லுங்கள். இன்னொருவன் இறைவன் தந்த அறிவின்படி விளையாட்டு கேளிக்கைகளில் இருக்கும் ஆர்வத்தை எல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு ஒழுங்காகப் படிக்கிறான். இவனும் நல்ல மதிப்பெண் பெற வைத்து படிக்காத மாணவனும் நல்ல மதிப்பெண் பெற வைத்தால் இறைவன் செய்வது நியாயமாகுமா?

இப்படித் தான் சில சமயங்களில் நம் பிரார்த்தனைகள் பலிக்காமல் போகலாம். அப்போ தெல்லாம் ஏன் அப்படிச் செய்தாய் ஏன் இப்படிச் செய்தாய் என்றெல்லாம் கேள்வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்காமல், இனியாவது இப்படிச் செய், அப்படிச் செய் என்று கோபத்தோடு அறிவுரை வழங்காமல் இருங்கள். இவர்களில் ஒருவன் பிரார்த்தனையை இறைவன் நிறைவேற்றினால், வேறொருவன் பிழைப்புக்கு இறைவன் கண்டிப்பாக வேறொரு வழியைக் காண்பிப்பான் என்பது நிச்சயம்.

பல நிகழ்வுகள் அந்தந்த நேரத்தில் தீமை போலவும் தோல்வி போலவும் தோன்றினாலும் பொறுத்திருந்து பார்த்தால் நடந்தது நன்மைக்கே என்பது புரிய வைக்கும்.

எனக்குத் தெரிந்த ஒரு தொழிலதிபர் பல கோடி சொத்துக்களுக்கு அதிபர். இறைவனின் தீவிர பக்தர். அவர் ஒரு முறை சொன்னார். “எனக்கு சிறு வயதில் இருந்தே வங்கியில் வேலைக்குச் சேர வேண்டும் என்று ஆசை. அது நிறைவேற தினமும் கடவுளிடம் வேண்டிக் கொண்டே இருப்பேன். மூன்று தடவை நுழைவுத் தேர்வும் எழுதினேன். ஒரு முறை கூட நான் பாஸாகவில்லை. பிறகு பரீட்சை எழுத வயது கடந்து விட்டது. நான் கடவுளிடம் கோபித்துக் கொண்டு ஆறு மாதம் கும்பிடாமல் கூட இருந்தேன்'' என்றார்.

பெரிய தொழிலதிபர் ஆகவும் பல கோடி சொத்துக்கு சொந்தக்காரர் ஆகவும் முன்னேற வேண்டிய மனிதர் ஒரு வங்கி ஊழியராக வேண்டும் என்று பிரார்த்தித்தால் இறைவன் என்ன செய்வார்? பக்தன் கோபப் பட்டாலும் பரவாயில்லை என்று பொறுத்துக் கொண்டு அந்த ஆசையை நிறைவேற்றி வைக்காமல் இருந்தது அவருடைய கருணையை அல்லவா காண்பிக்கிறது. எனவே பல நேரங்களில் உங்களுக்கு நல்லது எது என்று உங்களை விட இறைவனுக்கு நன்றாகத் தெரியும் என்பதை உணர்ந்திருங்கள். அவனிடம் அப்படிச் செய், இப்படிச் செய் என்று சொல்லி வழி காட்டாதீர்கள்.

"நம்பினார் கெடுவதில்லை! நான்கு மறை தீர்ப்பு!» என்கிறது இந்துமதம். “நம்பிக்கை கொள்ளுங்கள் நலம் பெறுவீர்கள்!'' என்கிறது கிறிஸ்தவம். "அல்லாஹ்வின் கட்டளையைக் குறித்தும் தீர்ப்பைக் குறித்தும் அதிருப்தி கொள்வது மனிதனின் துர்ப்பாக்கியமேயாகும்" என்கிறது இஸ்லாம். இப்படி எல்லா மதங்களும் இறைவனின் சித்தம் மனிதனின் சிற்றறிவை விட மேலானது என்றும் அதை எப்போதும் நம்புங்கள் என்றும் ஒருமித்த குரலில் சொல்கின்றன.

உங்கள் செயல்கள் உங்கள் நோக்கங்களுக்கு எதிராக இல்லாத வரையில், உங்கள் கடமைகளை நீங்கள் ஒழுங்காகச் செய்து கொண்டிருக்கும் வரையில் எல்லாம் வல்ல இறைவன் கண்டிப்பாக உங்களுக்கு எது நல்லதோ, எது சிறப்போ அதைச் செய்வான் என்பதை நம்புங்கள். அதை விட்டு விட்டு ஒவ்வொரு நாளும் என்னவெல்லாம் அவன் செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். அந்த அளவு பேரறிவு எந்த மனிதனுக்கும் இருக்க முடியாது என்பதை உணர்ந்திருங்கள்.

குழந்தை பிறப்பதற்கு முன்பே தாயின் மார்புகளில் பாலைத் தயார் நிலையில் உருவாக்க முடிந்த இறைவனுக்கு, அண்ட சராசரங்களையும் ஒப்பற்ற ஒழுங்கு முறையில் இயக்க முடிந்த இறைவனுக்கு, ஒவ்வொன்றையும் நீங்கள் சொல்லித்தான் தெரிய வேண்டும் என்று அவசியமில்லை. நல்லது நடக்க வேண்டும் என்று பிரார்த்தியுங்கள், தவறில்லை. ஆனால் அதன் பின் எது நடந்தாலும் அது சரியாகவே இருக்கும், இன்று புரியா விட்டாலும் பின்பாவது புரியவரும் என்று நம்பிக்கையுடன் பொறுத்திருங்கள். அதுவே இறைவன் மேல் வைக்கக் கூடிய உண்மையான நம்பிக்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலோரம் வாங்கிய காற்று

கடலோரம் நாம் வாங்கும் காற்று
கவலைகளைச் சற்று குறைக்கும் நம்பு...
வரலாறுகளைத் தாங்கி வருகின்ற அம்பு
வாழ்க்கைப் பயணத்திற்குத் தந்திடும் தெம்பு...

சுவாசிக்கும் காற்றை நேசித்துப் பார் !
சுதந்திரத்திற்காகப் போரிட்டு உயிரைக் கொடுத்த
சுத்தமான உள்ளங்கள் உன்னிடம் பேசும்
சுமைகளின் ஆழம் அப்போது புரியும்...

அங்கே சுவாசிக்கும் காற்றை பூசித்துப்பார் !
தன்னலம் மறந்து பொதுநலம் புரிந்த
தலைவர்கள் பலரை அடையாளம் காட்டும்...
புண்ணியங்கள் பல செய்து மடிந்த
புனிதர்கள் பலரை அழகாய்ப் போற்றும்...

அங்கே சுவாசிக்கும் காற்றை வாசித்துப்பார் !
குப்பத்தில் வாழும் அடித்தட்டு மக்களின்
குறைகளை எல்லாம் பட்டியலிட்டுச் சொல்லும்...
கடலுடன் நாளும் போராடும் மீனவரின்
கண்ணீரை உந்தன் மேல் விழவைக்கும்...

ஒவ்வொன்றாய் இதைநீ அறிந்த பிறகு
உனது பாரங்கள் பெரிதாய்த் தெரியாது...
உள்ளத்தில் அக்கணம் வலிகள் இருக்காது...
உனக்குள் பலமது சேரும் அழியாது...


**பாக்யபாரதி**
தகடூர் - ,தமிழ்நாடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூத்திருக்கேன்... காத்திருக்கேன்!

ரோசக்கார மச்சானே
பாசம் வச்சேனே
நின்னு ஒத்த
வார்த்தை பேசுங்க
ஓடைத் தண்ணி
ஓசைப் போல
கால் கொலுசு
சல சலங்க
நெல்லு மணி
சேர்க்க வரும்
சின்னச் சின்னச்
சிட்டுப் போல
கோபுரமா கோத்துவச்சு
கொறஞ்சுடாம பார்த்துவச்சு
குட்டி குட்டியா
கதை சொல்லி
கொஞ்சிப் பேச
கொள்ள ஆசை
அயித்த மகள்
நானும் வாரேன்
பலநாளா நெஞ்சுக்குள்ள
பாசத்தோட இந்தபுள்ள
பலசொமை வந்தாலும்
பக்கதுணை நானிருப்பேன்
பரிசம் போட
நாள் கேட்கும்
செங்காட்டு மண்ணோட
சேதியத்தான் கேளுமச்சா
மூணு மூடிச்சுப்போட
மாமாங்கம் காத்திருக்கேன்
துடிப்போட தூங்காம
ஏக்கத்துல
பூத்திருக்கேன்



ச. ஜெயலட்சுமி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதைக்கொண்டு வருவாயோ?

எதைக்கொண்டு வருவாயோ?
இருபத்தொன்று புத்தாண்டே?
புதிதாக நீவந்து
புதுப்பொலிவைத் தருவாயோ?
வதைத்திட்ட இருபதுபோல்
வருந்திடவே செய்வாயோ?
கதிகலங்கித் தான்போகக்
கவலைகளைத் தருவாயோ?

இருபதிலே நாமிருந்து
இன்னல்களை அனுபவித்தோம்!
கொரோனாவின் கொடுங்கோலில்
முடங்கித்தான் நாமிருந்தோம்!
இருபதுநாள் சிசு கூட
எரிவதனைப் பார்த்திருந்தோம்!
புரேவியதன் அதட்டலிலே
அடங்கித்தான் போயிருந்தோம்!

எதைக்கொண்டு வருவாயோ
இருபத்தொன்று புத்தாண்டே?

புதியதொரு வாழ்வொன்றைப்
புடம்போட மாட்டாயா?
இனவாதப் பேய்களினை
அழித்துவிட மாட்டாயா?
பொதுமைப் பூமலர
வழிகாட்ட மாட்டாயா?

புதிதாய்வா புத்தாண்டே
பூரிப்பைத் தந்துவிடு!

இனவெறியர் கொட்டத்தை
இல்லாமல் செய்துவிடு!
அநியாய அரக்கர்களை
அழித்துவிடு அழித்துவிடு!
இனி நீ வா மகிழ்வைத் தா!
இருபத்தொன்று புத்தாண்டே!

**பாவேந்தல் பாலமுனை பாறூக்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரம் பிடிக்க முடியாத என் காதலி

ரனூஸ்
முஹம்மத் இஸ்மாயில்

என் சிறுவயது முதல் மழைக் காலங்கள் மனதுக்குப் பிடித்துப்போன மந்திர காலங்கள்...

மழையின் சத்தத்தில்... போர் வைக்குள் கால் சுருட்டி உறங்குவது யாருக்குத்தான் பிடிக்காது..?

மழையின் சத்தத்தை விட ஒரு மிகச் சிறந்த மந்திரகானம் இருக்கும் என்று நான் நம்பவில்லை...

அதன் கூதலுக்கு வேலி கட்டி எனக்குப் பழக்கமே இல்லை...

மழை மண்ணை நனைக்கும் போதேல்லாம் என் மனது மட்டுமல்ல உடலும் நனைய வேண்டும்... என ஆத்மா அந்தரத்தில் பறக்கும்...

மழைக்குள் நனைந்து கொண்டே பெருக்கெடுக்கும் ஆறு களையும் வாய்க்கால்களையும் தரிசிப் பது எனக்கு மிகவும் பிடிக்கும்.

கூதலோடிப் போர்த்திக் கொண்டு நாரைகள் ஒற்றைக்காலில் தவமிருப்பதை இக்காலத்தில் வாய்க் கால், வரம்பு ஆறு குளம் என எங்கும் பார்க்கலாம். அதன் கவித்துவமும் கொள்ளை அழகும் நெஞ்சை விட்டு அகலவே அகலாது.

வேகமாய் பெய்யும் பெருமழை யின் முகத்தை மோதும் மழைத்துளி நெற்றியிலிருந்து உருண்டு மூக்கு வழியாக மீசையை தழுவி உதட்டில் ஊர்ந்து வாய்க்குள் நுழையும் தரு ணங்களில் மழை எனக்கு மணக்கும்.

வானம் கறுத்துச் சூழல் இருட்டித் தூறிக் கொண்டிருக்கும் வானப் பெருவெளியின் கீழ் ஒரு வயற்காட்டினூடே நடந்து பாருங்கள்.

மனதில் உள்ள விஷங்கள் கரைந்து மனிதனாக மனம் துள்ளிக் குதிக்கும்.

என் மனக்கண்கள் ஊடே மாரி மழை பொய்த்துப் போன காலத்தில் கூட மழையைப் பருகுவேன். அது எனக்கு மிகவும் பிடிக்கும்.

தெருவெல்லாம் ஓடும் மஞ்சள் மழை நீரை மறித்துக்கட்டி வீட்டுப் பயிர்களுக்குப் பாசனம் செய்வதும்.

பொறி வைத்துக் குயில் பிடிப்பதும், மழையோடு மழைத் துளியாவதும், உப்போடு மாங்காய் உறைப்பும் சேர்த்து உண்பதும், வீட்டை விட்டு மழை வெளியில் தொலைந்து போவதும் என் மழைக் கால வாடிக்கைகளாயின.

இன்றெல்லாம் என் பிரதேசத் தில் நான் அறிந்த புற்றீசல்கள், வண்ணாத்தி, வண்டுகள், தும்பி, மின் மினி, சில்லூரி, மரங்கொத்தி, கிக்கிலிப் பேய், விச்சுவிச்சான், கரிக் குருவி, பூக்குடிச்சான் இப்படி எவ்வளோவோ என் உறவினர்கள் காணாமல் போய் விட்டனர்.

இப்பொழுதெல்லாம் மாரிவந்தால் எனக்கு என் இளமைக் கால ஞாபகங்களை கிளறி விட சில தவளைகளே எஞ்சி இருக்கின்றன.

காக்கைக்குயில்கள் கூவுவது மில்லை இக்காலம்.

மழைக்காலம் உலவும் களு குளுப்பைகளும், மைனாக்களும், சிவப்புக்கண் புள்ளிக்குயில்களும் எங்கே போய் தொலைந்திற்று.

மனிதக் குணங்கள் படை எடுத்து பொசுக்கிக் கருக்கிட்டோ? ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகரந்தம் தூவும் மலர்கள்
## நூல் மதிப்புரை



இருபத்தாறு பெண் கவிஞர்களின் பங்களிப்பில், கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜு அவர்களால் தொகுக்கப்பட்டு, நிவேதிதா பதிப்பகத்தினால் பதிப்பிக்கப் பட்டிருக்கும் தன்முனைக் கவிதைகளின் தொகுப்பான 'மகரந்தம் தூவும் மலர்கள்' நூலானது, ஓர் அழகிய மலர்க்கண்காட்சியாகவே நான் காண்கிறேன்.

தன்முனை என்பது நான்கு வரிகள்தான். ஆயினும், காதலையும் பாசத்தையும் பிரிவையும் சோகத்தையும் சமூகச் சீர்கேடுகளையும், இன்னோரன்ன பல விடயங்களையும் இந்த நான்கு வரிகளுக்குள் மிகச் சிறப்பாக சொல்லி யிருப்பது பாராட்டுக்குரியது.

அத்தனையும் அழகியலைச் சுமந்த வண்ணம் அணிவகுத்து வலம் வர, அவற்றை வாசிக்கையில் எத்தனை உணர்வுகள் ஒன் றாக சங்கமிக்கின்றன. சில கவிதைகள் வியப்பின் உச்சிக்கே எமை இட்டுச் செல்ல, சில பனித்தூறலாய் வருடிச் செல்கின்றன.

சமூகச் சீர்கேடுகளைச் சாடுகை யில், ஒரு கோபத்தீ கனன்று வார்த்தை களில் தெறிப்பதையும் உணரக் கூடியதாகவே உள்ளது.

மனுக்குலத்தின் முறைகேடான வாழ்வியல், இயற்கை தந்த கொடை களையும் இழக்க வைத்து கையறு நிலைக்கு எம்மைத் தள்ளி விட்ட நிதர்சனங்களைத் தொட்டுக் காட்டும் கவிதைகள் சிலவும் மனதின் வலி கூட்டிச் செல்கின்றன.

அத்தனைக் கவிமலர்களையும் அள்ளிச் சூடிக் கொள்ள மனம் விழைந் தாலும், சிலவற்றை மட்டும் கொய்து உங்கள் முன் காட்சிப் படுத்துகிறேன். கொஞ்சம் ரசித்துப் பாருங்களேன்!

மூடிய புத்தகத்தில்
ஒற்றை மயிலிறகு
திறந்ததும் பார்க்கிறேன்
தொலைத்த பால்யத்தை
(கவிஞர் கலாராணி லோகநாதன்)

சிதறிக் கிடக்கின்றன
வானத்து விண்மீன்கள்
பிடித்து வைத்திருக்கிறது
புகைப்படக் கருவி
(கவிஞர் கனகா பாலன்)

திரும்பி வருமென்று
உறுதியான நம்பிக்கை
வெளியே விடுகிறோம்
மூச்சுக்காற்று
(கவிஞர் கீர்த்தி க்ருஷ்)

சேவல் கூவாது
பொழுது விடிகின்றது
இயற்கையை இழந்த
நகர்ப்புற வாழ்க்கை
(கவிஞர் நஸீரா எஸ் ஆப்தீன்)

கரிசல் காட்டில்
காய்ந்து போனது
மண் மட்டுமல்ல
மனித வாழ்க்கையும்
(கவிஞர் நெல்லை சோமசுந்தரி)

பாதரசம் பூசிய கண்ணாடியாய்
உறவுகள் என்றும் அழகு
வெறுப்பு எனும் கல்
எறியப்படாதவரை
(கவிஞர் பாரதி சிவசங்கரி)

அறியாமைக் கூட்டில்
அடைப்பட்டுக் கிடக்கும்
இளைய சமுதாயம்
கைப்பேசி மோகம்
(கவிஞர் பிரிதிவிராஜ் லோஜி)

நனைதல் வரம் தான்
அதைவிட பெரும் வரம்
உன்னுடன் நான்
ஒற்றைக் குடைக்குள்
(கவிஞர் ராஜிலா ரிஜ்வான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழிட்ட அறைக்குள்
நீ இருப்பினும்
சாளரம் வழி நுழைந்த
வெயிலாய் நான்
(கவிஞர் பாரதி பத்மாவதி)

இயற்கைச் சீற்றங்கள்
தட்டி எழுப்புகின்றன
மனதினுள் உறங்கும்
மனித நேயத்தை
(கவிஞர் ரேணுகா ஸ்டாலின்)

விதைக்குத் தெரியாது
விளைவது எதுவென்று
படைப்பவன் கையில்
வினைப்பயன்
(கவிஞர் விஜய கல்யாணி)

கண்ணாடி ஊடகங்கள்
பேசுகின்றன சுயமாய்
பிரதிபலிக்க மறந்த
நவீன சமூகம்
(கவிஞர் விஜி வெங்கட் )

உன்னைத் தவிர
வேறு எதிரிகளில்லை
என்னுள் ஒளிந்திருக்கும்
அகந்தை நீ
(கவிஞர் சாரதா சந்தோஷ்)

பக்குவமாய்ப் பதப்படுத்தி
கவனமாய் முடைகிறேன்
வளையாது நிமிர்கிறது
மூங்கிலொத்த வாழ்க்கை
( கவிஞர் அன்புச்செல்வி சுப்புராஜு)

அனைவருமே சளைக்காமல் தம் கவிமலர்களுக்குச்சொல்நயத்தால்மெருகேற்றி யிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து இன்னும் பல சிறந்த படைப்புகளை வழங்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

இருபத்தாறு பெண் கவிஞர்களை அரியணையேற்றியிருக்கும் இம் 'மகரந்தம் தூவும் மலர்கள்' மணம் வீசுவதோடு மட்டுமல்லாமல், இலக்கிய உலகையே பசுமைச் செழிப்பாக்கித் தழைத்தோங்கச் செய்யும்.

**வஃபீரா வஃபி**

# ஹைக்கூ

1. ரோஜா பூக்கள்
மணம் வீசுவதில்லை,
முட்கள்!

2. இறங்கும் வழியில்
இலைகளில் ஓய்வெடுக்கின்றன,
மழைத் துளிகள்!

3. பூக்கள் பார்த்திருக்க
தோட்டம் முழுக்க பறக்கிறது,
வாசனை!

4. ஒற்றைக் கையால்
கிளைகளில் தொங்குகின்றன,
கனிகள்!

5. மழை மேகம்
கோப்பி அருந்த கலையும்,
இரவு தூக்கம்!

6. காற்று தூக்கிவிட
பறந்து காட்டும்,
உதிர்ந்த இலை!

7. மரத்தை வெட்ட
அதே இடத்தில் விழும்,
வெயில்!

**எம். எல். எம். அன்ஸார்**

இனிமை
மழையில் நனைந்த
அந்த நாட்கள்...
இனிதானது - உன்
நினைவில் நனையும் - இந்த
நாட்களைப் போலவே.

- கருப்பு நிலா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்போம் மலர்ந்திருப்போம்

நாட்டுக்கும் வீட்டுக்கும்
நல் பிரஜையாக உருவாக்க...
கருவறையில் குழந்தைகள்
இருக்கும் போதே.....!
கொடுக்கப்படும் மருந்து வாசிப்பு...!

ஊமையாய் இருப்பவரைக் கூட
பேசவைப்பது வாசிப்பு மனதில்...
பார்வையற்றவர்களை கூட
பார்க்க வைப்பது...
தொட்டுணர்வு வாசிப்பு...!

நான்...
அறுசுவை விருந்தினை...
சுவைத்ததில்லை...
வாசிப்பு தேடலின் மூலம்
சுவைத்துக் கொண்டிருக்கிறேன்..
தன் படைப்புகளின் மூலம்...

அணுவாயுதங்கள் கூட...
அழிவைத்தந்து இடம் மறந்து போகும்.
வாசிப்பு என்பது...
தன் அடுத்த தலைமுறையினை
உருவாக்கும் ஆயுதமாகும்..!

வாசிப்பு என்பது...
எரிச்சலூட்டும் விடயமல்ல...
உன்.....
எதிர்கால வாழ்க்கையின்..!
திறவுகோல்..

மானுட வாழ்வின்...
சந்தோஷத்துக்காக....!
பொழுதுகள் கழிக்க...!
ஓய்வு எடுக்க...!
தகவல் தேவை திரட்டிக்கொள்ள...!
அறிவினை விருத்தி செய்து...!
வாழ்வினை அழகாக்கும்
ஓர் கலை வடிவம்
வாசிப்பு..!

உருண்டையான உலகத்தை...
உருட்டிப் பார்க்க...!
வாசிப்பு என்னும் சக்தியை...
தேடிச் செல்.......
கிடைத்தால்...!
எழுத்தாளனாவாய்...!
படைப்பாளனாவாய்...!
விமர்சகனாவாய்...!
உலகமே உன்னை...!
திரும்பிப் பார்க்க வைக்கும்
சக்தி வாசிப்பு...

நீங்கள் மறைந்தாலும்...
வாசிப்பில் பிறந்த படைப்புகள்..
உயிர்ப்பிக்கும் உங்களை
ஞானியாக..!

வாசிப்போம்.....
எழுதுவோம்......

மண்ணில் வீழும் வரை
வாசிப்போம்....
நல் படைப்புக்கள் மூலம்
மீண்டும் மலர்ந்திருப்போம்.

வாசிப்போம்...
எழுதுவோம்...

மலையருவியின் ஒரு துளி
**கோ.சந்ரூ**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹைக்கூ

தியானத்தில் குரு
கேள்விகள் கேட்க பதிலளிக்கிறார்
ஆசிரமத்தில் சீடர்

உதிர்ந்த மலர்
புத்தர் மீது ஏறியது
உயிர்பிழைத்த எறும்பு

குடை விற்ற பணம்
வீடு வந்து சேர்ந்தது
நனைந்தபடி

**- தட்சணா மூர்த்தி**

## காதலிலே காத்திருத்தல்:

அந்திமழை வருகிறதே ஆசைமனம் துடிக்கிறதே
எங்கிருந்தோ வரும்வாசம் உன்நினைவைக் கூட்டுதடி
உன்பாதம் தடம்பதிக்க பூத்தூவிக் காத்திருக்கேன்!!

வலியும், வேதனையும் காதலுக்குச் சொந்தமடி
காத்திருப்பில் இரண்டோடும் மனம் பரவசத்தில் மிதக்குதடி

நீலக்கடல் முன்னே படகருகே காத்திருக்கேன்
உனைக் காணும் ஆவலிலே அலைவந்து கால்தொட்டுப் போகுதடி
என்னோடு காத்திருக்கும் மணல் வீடும் கரையுதடி
செவ்வானச் சிவப்பாக வெட்கத்தில் முகம் சிவக்க நீ சொல்லும் காதலை
மனம் எண்ணி எண்ணித் தவிக்கிறதே
வானவில்லில் வார்த்தெடுத்த வஞ்சி வந்து சேர்ந்துவிடு!!

நான் சொல்லும் காதலுக்கும் நீ சொல்லும் காதலுக்கும்
சாட்சி சொல்ல வருகுதடி வட்டநிலா!!
விண்மீன்கள் வெளிச்சத்தில் உன்
முகம் காணும் ஆசையிலே...
எப்போது நீவருவாய் ஏக்கத்தைத் தவிர்த்திடுவாய்!!

**நாகலெட்சுமி இராஜகோபாலன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனை வழி நடத்திச் செல்

என் சிற்றுலகத்தின் சூரியன் நீயாக,
உன் நினைவுக் கதிர்கள்
எனை வழி நடத்திச் செல்ல,
உன் சுவாசக்காற்றையே
சுதந்திரக் காற்றாய் சுவாசித்து
வலம் வந்தேன்.

உன் அருகாமையின்றி,
உன் அன்னியோன்னியமின்றி,
உன் கைத்தாங்கலின்றி,
உன் கொஞ்சல் வாய்மொழிகளின்றி
அடரிருளில் தட்டுத் தடுமாறுகிறேனின்று.

என்னுயிருக்குள் உலவும்
உணர்வாக நீயிருக்க, உனை
ஒரு கணமும் மறவேனோ நானும்?
உன் நேசம் காணா என் தேசம்
கறுப்புச் சரித்திரமாக,
உனைக் காணா கணங்கள் யாவும்
கனமாகிப் போக, என்னுயிரே
எனக்கின்று சுமையானதே!

வஃபீரா வஃபி

## கிராமியப் பாடல்

வீசுகின்ற காற்றே நில்லு
வேதனைய நீ போய் சொல்லு
பாசத்தோடு காத்திருக்கும்
பைங்கிளியை பார்த்துச் சொல்லு .
நெஞ்சமென்னும் கூட்டுக்குள்ள
நிம்மதிய தொலைச்சுத்தான்
மஞ்சம் குத்தும் முள்ளுக்குள்ள
மயிலே உன்ன நினைச்சுத்தான்.

வீணாகப் போனேன் புள்ள
வினையாச்சி என்ன சொல்ல
ஆணாகப் பிறந்த போதும்
ஆதாயம் ஏதும் இல்ல .
தூணாக இருந்த வாழ்க்கை
துரும்பாக போச்சி இப்போ
வேணாமே கல்யாணந்தான்
விவசாயி உயர்வது எப்போ?

தண்ணீரும் வற்றிப் போச்சு
தடாகமெலாம் செத்துப் போச்சு .
அன்றாடம் குடிக்கிற நீரும்
ஆகாத சேறுன்னு ஆச்சு
வேகாத வெயிலின் எல்லை
வேளாண்மை கருகுது மெல்ல
சாகாம சாகுறன் புள்ள
சம்சாரம் எதுக்குன்னு சொல்ல.

கவிஞர். ஏரூர் கே. நௌஷாத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தகம் எடு
# புதுயுகம் தொடு

நித்தமும் ஒரு புத்தகம் வாசி இந்த
நித்திலம் சிறக்கும் நீ அதை யோசி.
சத்தியமாய் எல்லாம் சாத்தியமாகும்
ஒரு புத்தகம் போதும் இந்த உலகமே மாறும்.

தெருவிலே படித்தாலும் தலைவனாய் ஆகலாம்-நூல்
உருவிலே உந்தன் ஆளுமை வளர்க்கலாம்.
கருவிலே குழந்தையை சுமந்திடும் தாய்கூட
உருவாகும் குழந்தையை உலகாள வைக்கலாம்.

பாதைக்கு ஒளியூட்ட விளக்கு வேண்டும்-பாரில்
மாந்தர்க்கு அறிவூட்ட நூல்கள் வேண்டும்.
நீதியாய் நேர்மையாய் நெறிமுறை வாழ்விலே
சாதிக்க வேண்டும் நல்நண்பன் எனும் புத்தகங்கள்.

நாளிதழ் படிக்கையில் அந்த நாளில் ஒரு புத்துணர்ச்சி
நாளும் ஏதும் படிக்கையில் வாழும் வாழ்விலும் அதே
மலர்ச்சி.
தேடலுள்ள வாழ்வில்தான் தித்திப்பு இருக்கும்
தேடித்தேடி வாசிப்போம் வாழ்வும் புத்துயிர்ப்பாய் இருக்கும்.

நூல்களை வாசிப்போம் நால்வருக்கு அதை பகிர்வோம்.
நூலகங்கள் எல்லாமே நூல்களின் ஆலயம் ஆக்குவோம்.
சாலைகள் தோறும் வாசிகசாலைகள் அமைப்போம்
சரித்திரம் படைத்திடும் புத்தகப்புரட்சி செய்வோம்.

\- பிரகவி

9 772719 252001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org